விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 26 திங்கட்கிழமை (10.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 81

## அரசின் சமாதான முயற்சிக்கு எதிர்ப்பு
# தலை நகரில் இன்று மாபெரும் பேரணி
# வன்முறைகள் வெடிக்கும் அபாயம்!

### பலத்த பாதுகாப்புக்கு பிரதமர் ரணில் உத்தரவு

அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்க் கட்சிகள் இன்று தலை நகரில் நடத்தவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படாத வண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.ஜனாதிபதி நேற்று முன்தினம் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்திற்கு அமைவாகவே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பிரதமரின் இந்த உத்தரவுகளை உட்துறை அமைச்சர் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கியுள்ளார்.அமைச்சர் இது பற்றிக் கருத்துக் கூறு கையில்,ஆர்ப்பாட்டக்காரர்கள் பஸ்கள்,கடைளைத் தீயிட்டுக் குழப்பங் கள் விளைவிக்கவும்,பொலிஸாருக்கு ஆத்திரம் (10ம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளில் நாளை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை செவ்வாய்க் கிழமை வடக்குக் கிழக்கில் உள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் கல்விச் செயற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்யும் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

பேரணியாக மாவட்டச் செயலகங்களுக்குச் சென்று அரச அதிபரூடாக பிரதமருக்கு மகஜர் கையளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.(த)

அன்பு வாசகர்களே!
இன்று உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல் கட்டுரையுடன்
விலை ரூபா 12/-

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது அவசியம்
# சமாதான முயற்சிக்கு படையினர் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்

### முப்படையினர் மத்தியில் அமைச்சர் பீரிஸ் உரை

(வவுனியா)

**நீண்டகாலமாகத் தீர்த்து வைக்கப்படாமல் உள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவத் தீர்வு ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது.பேச்சு வார்த்தை மூலமான அரசியற் தீர்வே இறுதியானதாகவும்,உறுதியானதாகவும் இருக்குமாதலால் அதற்குப் படைத் தரப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அரசு மேற் கொண்டு வரும் சமாதானப்பேச்சுவார்த்தை தொடர்பாக வன்னி மாவட்ட முப்படையினருக்கும் விளக்குமுகமாக நடை பெற்ற வைபவம் ஒன்றிலேயே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வன்னி இராணுவத் தலைமையகத்தில் நேற்றுக் காலைநடைபெற்ற இவ் வைபவத்தில் வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திர பண்டார, முப்படையின உயர் அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அரச குழுவுக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சமாதான முயற்சி தொடர்பாக விளக்கமளிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இரண்டு தசாத்த காலத்திற்கு மேலாக தீர்த்து வைக்கப்படாதுள்ள இனப் பிரச்சினைக்குத் நல்லதொரு தீர்வைக (10ம் பக்கம் பார்க்க)

### இன்றைய ஆர்ப்பாட்டத்தில்
# தமிழர்களின் உடைமைகளை தாக்க தீயசக்திகள் சதி
### -ஜனாதிபதி எச்சரிக்கை-

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடை பெறவுள்ள எதிரணியினரின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு சொந்தமான கட்டடங்கள் மீதும் வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல்களை மேற் கொள்வதற்கு சில தீய சக்திகள் தயாராகி வருவதாக தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அச்சம் வெளியிட்டுள்ளார்.

இன்று நடை பெறவுள்ள ஆர்ப்பாட்ட (10ம் பக்கம் பார்க்க)

### ஈராக் மீதான தாக்குதல் உறுதி
# கொழும்பிலுள்ள அமெ.தூதரகம் வாயு முகமூடிகளைத் தருவித்தது

(கொழும்பு)

ஈராக் தனது பேரழிவு ஆயுதங்களை அழித்து விடுவதற்கு தவறின் படை நடவடிக்கையை எதிர் கொள்வதற்கு மார்ச் 17ம் திகதியை காலக்கெடுவாக வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஐ.நா. பாதுகாப்புச் சபையை கேட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது பணியாளர்களுக்கு வாயு முகமூடிகளைத் தருவித்திருக்கின்றது.

இரசாயன அல்லது உயிரியல் வாயுத் தாக்குதல் ஏற்படுமாயின் இவற்றை முன் எச்சரிக்கையாக பயன்படுத்த முடியும் என்று அமெரிக்க தூதரகப் பேச்சாளர் புறூஸ் லோஹோவ் தெரிவித்தார்.

உலக நாடுகள் அனைத்திலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் இத்தகைய பாதுகாப்பை எடுத்துள்ளன.இது இலங்கைத் தூதரகத்திற்கு மட்டும் உரியதல்ல எனத் அவர் தெரிவித்தார். (த)

### மன்னாரில் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(மன்னார்)

மன்னார்க் கடலில் தமிழக மீனவர்கள் இழுவைப் படகுகள் சகிதம் அத்துமீறி நுழைவதைக் கண்டித்தும் தமது கடற் தொழில் உபகரணங்களை அபகரித்துச் செல்வதை தடுக்குமாறு கோரியும் இன்று மன்னாரில் மிகப் பெரிய அளவிலான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடை பெறவுள்ளது.

மன்னார்க் கடற்றொழிலாளர் சமாசம் ஏற்பாடு செய்துள்ள இக் கண்டன ஊர்வலத்தில் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் இதில் கலநது கொள்ளவுள்ளனர்.இதில் தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களான சிவசக்தி ஆனந்தன்,செல்வம் அடைக்கலநாதன் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

# உண்ணா விரதிகளின் நிலை கவலைக்கிடம்

(களுத்துறை)

தம்மைக் விடுவிக்குமாறு கோரி களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரைஉண்ணா விரதம் மேற் கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளில் 35 பேரின் நிலை கவலைக்கிடமாகவும் 25 பேர் இரத்த வாந்தி எடுத்து வருவதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று 9வது நாளாக உண்ணா விரதம் இருந்து வரும் இக் கைதிகள் தமது கோரிகைகள் நிறைவேற்றப்படாத வரை உண்ணா விரதம் இருந்து உயிர் துறக்கப் போவதாகவும தமக்கு ஆதரவு தெரிவித்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

# கச்சதீவுப் படகோட்டி கடலில் வீழ்ந்து மரணம்

(நெடுந்தீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவிற்கு படகில் சென்ற பக்தர்களை கரையில் இறக்கிவிட்டு நங்கூரமிடுவதற்கு முயற்சித்த வேளை படகிலிருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இப் பரிதாபச் சம்பவத்தில் நெடுந்தீவு 14ம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நா.ரவிச்சந்திரன் (வயது39) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் கரையொதுங்கிய சடலம் கடற்படையினரால் மீட்கப் (10ம் பக்கம் பார்க்க)







## இன்றைய போட்டியில் விளையாட 80 வீதம் சாத்தியம் உண்டாம்

### நம்பிக்கை தெரிவிக்கிறார் ஜெயசூரியா

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இந்திய-இலங்கை அணிகளுக் கிடையிலான சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் தான் விளையாடு வதற்கு 80 வீத சாத்தியம் உள்ள தாக சனத் ஜெயசூரியா தெரிவித் துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரெட்லீ வீசிய பந்து ஜெயசூரியாவின் இடது மணிக்கட்டிலும், பெருவிர லிலும் காயத்தை ஏற்படுத்தியது. இதனையடுத்து அவர் இன்றைய போட்டியில் விளையாடுவாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டது.

எனினும் அவர் நேற்று பயிற்சிகளில் ஈடுபட்டதுடன் இன்றைய போட்டிகளில் தான் பங்கு பற்றுவதற்கு 80 வீதம் நம்பிக்கையுள்ளதாக தெரிவித்தார். மணிக்கட்டில் ஏற்பட்ட உபாதை சமாளிக்கக் கூடியதாய் இருப்ப தாகவும் ஆனால் பெருவிரல் பிரச்சனையாக உள்ளதாகவும்



ஜெயசூரியா. கூறினார்.

இதேவேளை இலங்கை அணியின் ஹசான் திலகரத் னாவின் தொடையில் சதைப் பிடிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் அவர் விளையாடக் கூடிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(த-5)

**இன்றைய ஆட்டங்கள்**

**இலங்கை எதிர் இந்தியா**

(ஜேகனஸ் போக்)

2.00 P.M

ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003
ICC Cricket World Cup

## இன்று களமாடும் சமபலம் கொண்ட அயல்வீட்டு அணிகள்

### வெல்லப் போவது யார்? ரசிகர்கள் ஆவல்

உலகக் கிண்ணக் கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் இன்று இலங்கை இந்திய அணிகள் ஜெகனஸ் போக்கில் வொன்டரஸ் மைதானத்தில் மோதுகின்றன.

தற்பொழுது இந்திய அணி 12 புள்ளிகளுடன் உள்ளது. இது இலங்கை அணியை வென்று 4 புள்ளிகளைப் பெறும் போது அரை இறுதிக்கான தகுதியை பெற்றுக் கொள்ளும். இல்லாவிடின் எதிர்வரும் 14ம் திகதி நியூசிலாந்துடனான போட்டி இந்தியாவுக்கு முக்கியமா னதாக இருக்கும். இலங்கை அணியைப் பொறுத்த வரையில் தற்பொழுது 7.5 புள்ளிகளுடன் இருக்கிறது. இன்றைய இந்தியா வுடனான போட்டியிலும் எதிர்வரும் 15ம்திகதி நடைபெறவுள்ள சிம்பாப் வேயுடனான போட்டியிலும் இலங்கை வெற்றி பெற்றால் மாத்திரமே அரைஇறுதி போட்டிக்கு தகுதி பெறும். அதை விட கென்யா அணி சிம்பாப்வே அணியுடன் தோல்வி காணும் பட்சத்தில் இலங்கை அணி சிம்பாப்வேயையும், இந்தியாவையும் வெல்லும் பட்சத்தில் அரைஇறுதிப் போட்டிக்கு தடங்கல் இன்றி முன்னேறும்.

இன்றைய போட்டியில் இலங்கை அணி தோல்வியடையும் பட்சத்தில் கென்ய அணி சிம்பாப்வே அணியை வென்றால் இலங்கையின் பாடு அம்போதான். இதுவரை இரு அணிகளும் 70 ஒருநாள் போட்டிகளில் விளையாடி யுள்ளது. இதில் இந்திய அணி 39 போட்டிகளில் வெற்றியையும் 29 தோல்வியையும் சந்தித்துள்ளது. கடைசியாக இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற 12 போட்டி களில் இரு அணிகளும் தலா 5 வெற்றிகளைப் பெற்றுள்ளது.

உலகக் கிண்ண வரலாற்றில் இரு அணிகளும் ஒன்றை ஒன்று நான்கு தடவைகள் எதிர்த்தாடி யுள்ளன. இதில் இலங்கை மூன்று தடவைகளும் இந்தியா ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளது. எனினும் 1999ம் ஆண்டு நடை பெற்ற உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இந்தியா 157 ஓட்டங்களால் இலங்கையை வெற்றி கொண்டது.

இதேவேளை 2000ம் ஆண்டு நடைபெற்ற போட்டி ஒன்றில் இந்தியா 54 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து இலங்கை அணி 245 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது. இதில் ஜெயசூரியா 189 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்னணியில் இரு அணிகளும் களத்தில் இறங்கவுள்ளன. இது இந்திய, இலங்கை ரசிகர்க ளிடையே பெரும் ஆவலை ஏற்படுத்தியுள்ளது.

உலகக் கிரிக்கெற் அணிகளுக்கு ஜென்ம விரோதியாக இருக்கும் முரளிதரனின் பந்து இந்திய அணியை நிலைகுலையச் செய்யும் என விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். எனினும் சச்சின் டெண்டுல்கர், கங்குலி, சேவாக் ஆகியோ ரின் அதிரடி ஆட்டம் இலங்கை அணியினரை நிலைகுலையச் செய்யாமல் இருக்கும் என்பதற்கில்லை. இதைவிட இன்றைய போட்டியில் சனத் ஜெய சூரியா, அரவிந்த டி சில்வா, அத்தப்பத்து ஆகியோரின் அதிரடியாட்டம் இலங்கை அணியின வெற் றிக்கு உறுதியாக இருக்கும் என்று நம்பலாம். (த-5,55)

## உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரரும், பந்துவீச்சாளரும் இன்று எதிர்த்து களமிறங்குகின்றனர்

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கரும் சிறந்த சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனும் சுமார் 3 வருடங்களின் பின்னர் இன்று ஒருவரை ஒருவர் எதிர்கொள்ள



வுள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் சர்வதேச கிரிக்கெற் பேரவைக் கிண்ண இறுதிப் போட்டியில் இவர்கள் இருவரும் எதிர்த்து விளையாடிய போதும் மழை காரணமாக இருவரும் சந்திக்கும் வாய்ப்பு அற்றுப் போனது.

இதே வேளை கிரிக்கெற் துறை உருவாக்கிய மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் டெண்டுல்கரும் ஒருவராவார் என்று முரளிதரன் கூறியுள்ளார்.


அவர் தொடர்ந்து கூறுகையில் நான் எவ்வாறு பந்து வீசுவேன் என டெண்டுல்கர் அறிந்துள்ளார். அதனால் எனது பந்திற்கு அவர் ஏமாறமாட்டார். எனினும் மற்றைய வீரர்கள் எனது பந்தை அண்மைக் காலத்தில் எதிர் கொள்ளாததால் அவர்கள் எனது பந்திற்கு சிறிது தயக்கம் காட்டுவார்கள் என்றார்.



முரளிதரன் 2000ம் ஆண்டு ஒக்ரோபர் 29ம் திகதி இறுதியாக இந்திய அணிக்கு எதிராக ஒருநாள் போட்டி ஒன்றில் விளையாடி இருந்தார். இதற்கு முன்னர் இந்தியாவுக்கு எதிரான போட்டி ஒன்றில் முரளிதரன் 30 ஓட்டங்க ளுக்கு 7 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார். அத்துடன் 54 பந்துகளைச் சந்தித்து 61 ஓட்டங்களைப் பெற்று ஆடிக் கொண்டிருந்த டெண்டுல்கரின் விக்கெட்டையும் முரளிதரன் கைப்பற்றியிருந்தார்.


(த-5)

## மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர்



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் புதிய பயிற்றுவிப் பாளராக முன்னாள் தென்ன பிரிக்க அணியின் பயிற்றுவிப் பாளரும் தற்போதைய சர்வதேச கிரிக்கெற் சபையின் உயர் அதிகாரியாகவும் கடமை யாற்றி வரும் பொப் வூல்மர் தெரிவு செய்யப்பட் டுள்ளார். கடந்த வாரம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் விவிலியன் றிச்சாட்ஸ் உட்பட நான்கு தேசிய மட்ட தேர்வாளர்கள் குழு முன்னி லையில் கிம்பேலியில் இடம் பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப் பாளருக்கான தேர்வில் வூல்மர் தெரியப்பட்டுள்ளார். இத் தேர்வில் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அக்கடமியின் பயிற்றுநர் பெனற் கிங்ம் உம் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-55)




இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

வலம்புரி

நாடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப் போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்

பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1.இம் முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2.இப் போட்டியின் சகல துறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

வலம்புரி

இல, 15 வெள்ளாந் தெரு

யாழ்ப்பாணம்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ.அ.இல : ..........

கையொப்பம்: ..........

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

## சிறுவிளம்பரம்

### மணமகன் தேவை

எட்டில் செவ்வாயுள்ள கிரக பாவம் 42 மட்டுமேயுள்ள 18.06.1969 இல் பிறந்துள்ள பூச நட்சத்திரம் கொண்ட ஆசாரியார் குலத்தில் உதித்த படித்த பெண்மணிக்கு ஏற்ற மணமகன் தேடுகின்றோம். ஆசாரியார் குலத்தவர் மட்டுமே விண்ணப்பிக்கவும். நேரிலோ இல்லையேல் கடிதமூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:திருV.A சிவராசா சோதிடர், 152B,அரசடி றோட், கந்தர் மடம்,யாழ்ப்பாணம். *(6807)*

நிரந்தர சமாதானம் ஏற்பட

# தமிழ்-முஸ்லிம் தலைவர்களின் நிலையில் மாற்றம் வேண்டும்

## ஜனாதிபதி குமாரதுங்க கருத்து

(கொழும்பு)

தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு சகல துறைகளிலும் சமவுரிமை வழங்கும், வழங்கப்பட வேண்டும் என்ற தனது நிலையில் எதுவித மாற்றமும் இல்லை. நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என்பதற்காக பொது ஜனஐக்கிய முன்னணிக் கட்சியின் சகல உறுப்பினர்களதும் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் உண்டு என்பதுடன் உறுதியாகவும் உள்ளனர். நிரந்தர சமாதானம் நிலவவேண்டுமானால் அரசியல் ரீதியில் புதிய தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று முன்தினம், குருநாகல் பல்லிதெவ மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்தும் பேசுகையில், தற்போதைய ஒரு சில அரசியல் தலைவர்களின் சுயலாபம் கருதும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படவேண்டும்.

அவ்வாறே ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கொள்கைகளில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதைப் போன்று தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களின் கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

1977ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி நாட்டை ஆட்சி செய்த கட்சிகளின் துணையுடன் மக்கள் விடுதலை முன்னணியும் அக்கட்சி போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட ஏனைய கட்சிகளும்,இயக்கங்களும் அரசியலின் பல முக்கிய உறுப்பினர்களை கொன்று குவித்தனர்.

மக்களின் ஒத்துழைப்புடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு நாட்டை ஆட்சி செய்வதே தனது நோக்கம் எனவும், அதன் பொருட்டு மக்கள் புதிய தலைவர்களை தெரிவு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை,2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் காலத்தில் கண்டி உடத்தலவின்ன பகுதியில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பந்தமான உண்மையான குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டும்.

பொதுத் தேர்தல் காலத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 60 க்கும் மேற்பட்டோர் தேர்தல் வன்முறைகளில் இறந்துள்ளனர். ஆயிரத்து 500க்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆனால் இவைகள் குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். (க-8)

## செய்தித் துளிகள்

### இல்லமெய்வல்லுநர் போட்டி

(சண்டிலிப்பாய்)

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியானது நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.தர்ம சோதி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மற்றும் சிறப்பு விருந்தினராக யா/இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் பெ. குபேரநாதன் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர். (க-258)

*****

(கோப்பாய்)

யா/உரும்பிராய் றோ.க.த.க ஆரம்பப்பாடசாலையின் வினோத விளையாட்டு விழா நிகழ்வுகள் எதிர் வரும் புதன்கிழமை பி.ப 2மணியளவில் வித்தியாலய அதிபர் முத்துச்சாமி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.வலயபபிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரம், பங்குத்தந்தை அருட்திரு பி.ஜே.அன்ரனிமாலா, உரும்பிராய் இந்துக் கல்லூரி கனிஷ்ட கிளை இணைப்பாளர் வி.சோமநாதன் வலிகிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளா எஸ்.யாழவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-79)

*****

(கல்வயல்)

யா/புனித மரியாள் மகா வித்தியாலய(OLR)விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-36)

### கணித பாட உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

குட்டியபுலம் அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மற்றும் தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்களுக்கு கணிதபாட கற்கைநெறிக்கான உபகரணம், அப்பியாசக்கொப்பிகள், பேனைகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

சமாதான நீதிவானும் இளைப்பாறிய சமூக சேவை உத்தியோகத்தருமான ஏ.இராமநாதன் மற்றும் அவரது மகன் ஆர். சத்தியதரன் ஆகியோர் இணைந்து இவ் அன்பளிப்பு பொருட்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

பாடசாலை அதிபர் செ.கந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கான ஏற்பாடுகள் உபஅதிபர் சிவசிவாவினால் மேற்கொள்ளப்பட்டது.

இப்பாடசாலையில் கற்று பரீட்சைகளில் திறமையாக சித்தி அடையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஒரு சில மாணவர்களுக்கான கல்வியைத் தொடர்வதற்கான உதவிகளை வழங்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் இவர் உறுதி வழங்கினார். (க)

### நிர்வாகிகள் தெரிவு

(சில்லாலை)

மாதகல் கிழக்கு சகாயபுரம் இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு மேற்படி அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக இரத்தினம் செல்வச்சந்திரனும்,செயலாளராக யோசேப்பு றதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன சமூக மேம்பாட்டுப் பிரிவினர் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.(க-58)

### ஆசிய அபிவிருத்தி வங்கி 270 கோடி நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளை விருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 270 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி 7 பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான ஆராய்ச்சி வேலைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. (க-8)

### பாடசாலை விடுமுறைகளில் மாற்றம்

(கொழும்பு)

பாடசாலை விடுமுறைத் தினங்களில் மாற்றங்களைக் கொண்டு வர கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி தொடங்கிய பாடசாலை, முதலாம் தவணை ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி முடிவடைகிறது. இரண்டாம் தவணை மே மாதம் 5ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரையும் நடைபெறும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

### பன்றித்தலைச்சி உற்சவம்

(கல்வயல்)

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் உற்சவங்கள் மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரையுள்ள 4 திங்கட் கிழமைகளில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நான்கு தினங்களும் அபிஷேக ஆராதனைகளும் பொங்கல் வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (க-36)

### வட-அல்வாயில் கட்டடத் திறப்பு விழா

(பருத்தித்துறை)

வட-அல்வை நக்கீரன் சனசமூக நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா 10ஆம் திகதி இன்று நிலையத் தலைவர் வி.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் சனசமூக நிலையத் தலைவர் கே.இராசரத்தினம் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார். பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஏ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.(க-52)

### கால்நடைகள் பற்றாக்குறை

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால இராணு நடவடிக்கைகளால் கறவை இனப் பசுக்கள்,ஆடுகள், எருதுகள் என்பன அழிந்து போன காரணங்களினால் தென்மராட்சியில் கால் நடைகளுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றன.

கால்நடைகளின் விபரம் அதிகரித்துக் காணப்படுவதானாலும் ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தென்மராட்சியில் பதினாறாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய வறிய குடும்பங்களும் விவசாயத்தை முதன்மைத் தொழிலாக நம்பி வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.(க-36)

# இராணுவத்தை விட்டுத்தப்பிச் சென்றவர்களால் அரசுக்கு ஆயிரம் மில்லியன் இழப்பு

(கொழும்பு)

ஒரு இராணுவச்சிப்பாயைப் பயிற்றுவிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா செலவாகிறது. படையிலிருந்து விட்டோடியவர்கள் சுமார் 60 ஆயிரம் பேர்கள் உள்ளனர். இவர்களிடமிருந்து இவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தை அறவிடாமல் விடுவதால் அரசாங்கம் 4000ஆயிரம் மில்லியன் ரூபாவை இழக்கிறது என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து விட்டோடியவர்களை திரும்ப சேவையில் இணைத்துக் கொள்வதற்கு பல தடவைகள் மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை. இதனால் 60ஆயிரம் வரையான விட்டோடியவர்களிடம் இருந்து பயிற்சிக்கான செலவை அறவிடாமலேயே அவர்களை படைகளில் இருந்து விலக்கிவிடவும், அவர்களுக்கு . சான்றிதழ்களை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

மதிப்பீடுகளின் படி ஒரு சிப்பாய்க்கு வழங்கல்களுக்காக 19ஆயிரத்து 650 ரூபாவும், 15ஆயிரம் - 20ஆயிரம் ரூபா அடிப்படைப் பயிற்சிக்காகவும், 70ஆயிரம் தொடக்கப் பயிற்சிக்காகவும் செலவிடப்படுகின்றது.விட்டோடிகளில் 500 பேர்கள் வரை அதிகாரிகள் ஆவர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வருடத்திற்கேனும் நாட்டிற்கு சேவை செய்திருக்கவில்லை. இதனால் ஒரு விட்டோடிக்கு ஒரு லட்சம் ரூபாவரை நட்டம் ஏற்படுகிறது என்று அவ் இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ)

# பாராளுமன்ற ஜனநாயகத்தை விரிவுபடுத்த பிரதமர் விருப்பம்

(கோட்டை)

மரணதண்டனை தொடர்பான பகிரங்க விவாதம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் இடம்பெறவிருக்கின்றது. அரசதரப்பு உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதற்கு இடமளிக்கப்படுமென்று தெரிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சமகால பிரச்சினைகள் பற்றி வெளிப்படையான கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு அனுமதிப்பதென யு.என்.பி பாராளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

பாராளுமன்றத்தின் ஜனநாயகத் தன்மையை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பாராளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு இவ்வாறான பல யோசனைகளைத் தாம் அறிவித்திருப்பதாகவும் அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென நம்புவதாகவும் பிரதம மந்திரி கூறினார்.

இதுபாராளுமன்ற ஜனநாயகத்தை பரவலாக்கும் நடவடிக்கையென்று குறிப்பிட்ட பிரதம மந்திரி, நிலை இயல் சட்டங்களைத் திருத்தி அமைக்க இது உதவும் என்றும் கூறினார்.(பி)

### அமைச்சரின் ஆதரவாளர் மீது தாக்கு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஹங்குராங்கெட்ட பதியபல்ல என்னும் இடத்தில் வைத்து அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கவின் ஆதரவாளர்களை தாக்கியமை தொடர்பான வழக்கு விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதியின் முன்னாள பாதுகாப்பு பிரிவுப் பணிப்பாளர் உட்பட 13சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜுலை மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கண்டி மேல் நீதிமன்றதத்தில் இவ்வழக்கு விசாரணைக்காக எடுததுக கொள்ளப்பட்ட போது நீதிவான் ஏ.ரி. லேக்கம்பஹகம் ஒத்திவைத்தார்.

பதியப்பல்லப் பகுதியில் பிரசார நடவடிக்கைகளுக்காக சட்டவிரோதமாக கூடியமை, அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கவின் வாகனத்தை சேதப்படுத்தியமை, அமைச்சரின் ஆதரவாளர்களைதாக்கியமை ஆகிய குற்றச் சாட்டுகளின் பேரில் சட்டமா அதிபரினால் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (க-08)

# அரசாங்க அதிகாரிகளால் அதிகார துஷ்பிரயோகம்

## அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகள் தங்களது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட பலப்பிட்டியாவில் புதிய பிரதேச செயலகக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அமைச்சர், பிரதேச செயலாளர்களும், கிராமசேவை உத்தியோகத்தர்களும் தமது கடமைகளைப் பொறுப்புடன் செய்ய வேண்டும்.

ஆனாலும், சில அதிகாரிகள் இவ்வாறான துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றைத் தடுப்பதற்கு விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (க-8)

# நிலக்கண்ணி அகழ்வுக்கு நெதர்லாந்து நிதி உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக நெதர்லாந்து அரசாங்கம் 4 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெதர்லாந்து அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்நிதியுதவி மூலம் யாழ். மாவட்டத்தின் விவசாயக் காணிகள் மற்றும் மக்களின் குடியேற்றப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும்.

கடந்த காலங்களிலும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கு நெதர்லாந்து அரசாங்கம் உதவி வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# ஈராக் ஆயுதக் களைவுக்கு 17ஆம் திகதிவரை அவகாசம்



உலக அமைதிக்காகப் பிரார்த்தனையில் ஈடுபடும் இந்தோனேஷிய முஸ்லிம் மக்கள்.

## பிரிட்டன், அமெரிக்கா புதியதீர்மானம்

(வாஷிங்டன்)

ஆயுதக் களைவுக்கோரிக்கைகளிற்கு ஈராக் இணக்கம் தெரிவிப்பதற்கு எதிர்வரும் 17ஆம்திகதி வரை காலக்கெடுவிதித்திருக்கும் புதிய தீர்மானம் ஒன்றை அமெரிக்கா, பிரிட்டன், மற்றும், ஸ்பெயின் பாதுகாப்புப்பேரவையில் கூட்டாக முன்வைத்து உள்ளனர்.

புதிய திருத்தத் தீர்மானத்தை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜெக்ஸ்ரோ பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

ஈராக் மீதான யுத்தத்திற்குப் பேரவையின் அங்கத்துவ நாடுகள் சில எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில இவ்வாறான காலக்கெடு விதிப்பு குறிப்பிட்ட நாடுகளின் எண்ணத்தை மாற்றும் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் நம்புகின்றன.

எனினும், இந்தப் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் உள்ள 15நாடுகளில் 9நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

இதேவேளை, தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரான்ஸ், ரஷ்யா, மற்றும் சீனா ஆகியவை தமது 'வீட்டோ' தடை உத்தரவு அதிகாரத்தின் மூலம் தீர்மானத்தைத் தோல்வி அடையச் செய்ய முடியும்.

### *அமெரிக்காவின் அழுத்தம்*

ஈராக்கிற்கு எதிர்வரும் 17ஆம் திகதி வரைமட்டுமே காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் எனக்கூறியுள்ள அமெரிக்கா இந்தக்கால அவகாசத்தினை ஏற்றுக்கொள்ளுமாறு ஐ.நா பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளைக் கேட்டுள்ளது.

ஈராக் இந்தக்கால அவகாசத்தை ஏற்றுக்கொண்டு ஆயுதக் களைவை மேற்கொள்ளா விட்டால் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் ஈராக் தொடர்பான 2ஆவது தீர்மானத்திற்கு எதிராக ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் குரல் எழுப்பியுள்ளன.

அத்துடன் ஈராக்கின் ஆயுதச் சோதனைகளை மேற்கோள் காட்டி மேலும் போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும், அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐ.நா சபையின் 2ஆவது தீர்மானம் நிறைவேற்றப்படாமல் ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாகப் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் 5பேர் அறிவித்துள்ளனர்.

ஐ.நா. அதிகாரத்தை மீறும் செயலை ஏற்கொள்ள முடியாது என்றும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஐ.நா. அனுமதியின்றி ஈராக்மீது நடத்தப்படக் கூடிய தாக்குதல்களிற்கு எதிராக பிரிட்டனில் ஆளும் தொழிலாளர் கட்சிக்குள் இருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளது.

இதனால், பிரதமர் ரொனி பிளேயரின் ஆட்சிக்குப் பாதிப்பு ஏற்படலாம் என பிரிட்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-9)

### *பாக். இராணுவத்திடம் அணுஆயுத ஏவுகணை*

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் இராணுவத்திடம் அணு ஆயுத ரகஏவுகணை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அதிபர் பர்வேஷ் முஷாரப் பங்கேற்றார்.அணுஆயுத ரக ஏவுகணை இது. நடுத்தர தொலைவு இலக்குகளைத் தாக்கவல்லது. சண்டைப் போக்குடன் அண்டைநாடு செயற்படுவதால், அணுஆயுதங்களை நாடவேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளதாக முஷாரப்குறிப்பிட்டார். (பி)



தென்.கொரிய தலைநகர் சியோலில் தேவதைபோல உடையணிந்து உலக மகளிர் தினத்தைக் கொண்டாடும் இளம்பெண்.

## *சீனவில் தமிழ்நாடு நிறுவனம் முதலீடு*

(சென்னை)

தமிழ்நாட்டின் டி.வி.எஸ் குழுமத்தைச் சேர்ந்தசுந்தரம்பாஸனர்ஸ் நிறுவனம் 50இலட்சம் அமெரிக் டொலர்கள் மதிப்பில், மோட்டார் வகன உதிரிபாக உற்பத்தித் தொழிற சாலையை தெற்கு சீனாவில் அமைக்கவுள்ளது. அடுத்த ஆண்டின் மத்தியில் அங்கு உற்பத்தி தொடங்கவுள்ளது.

சீனாவில் அமைக்கப்படும் தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தித்திறன் 6ஆயிரம் டன்களாக இருக்கும். முதலில் சீன நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யவும்,பின்னர் பக்கத்தில் உள்ள தைவான், கொரியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் முயற்சிக்கப்படும் எனறு அந்நிறுவனத்தின் அதிபர் ஒருவர் கூறினார். (பி)

## தாய்லாந்து மனித உரிமை ஆணையருக்கு கொலை மிரட்டல்

(பாங்கொங்)

தாய்லாந்தின் மனித உரிமை ஆணையாளருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் போதைவஸ்து கடத்துவோருக்கு எதிராக தாய்லாந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கையை அந்த நாட்டின் மனித உரிமை ஆணையாளர் பிரடிற் விமர்சித்திருந்தார்.

போதைவஸ்து ஒழிப்புக்கு எதிராக தாய்லாந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஒருமாதத்திற்குள் மட்டும் ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டமை குறித்து அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

பிரடிற் இவ்வாறு விமர்சித்து இருந்ததை தாய்லாந்து அரசும் கண்டித்திருந்தது.

இந்த நிலையில் தற்போது இவருக்குகொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.இந்தக் கொலை மிரட்டல்யாரால் விடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (உ-2)

# லேடன் உயிருடன் இருக்கிறார் எங்கே என்பது நிச்சயமில்லை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை கைதான அல்கெய்டா முக்கியஸ்தர் காலித் ஷேக் முஹமது விடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருந்து ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருப்பதாகவும் காலித் ஷேக் முஹமதுவும் பினலேடனும் அண்மையில் சந்தித்திருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து பாகிஸ்தானின் தென்மேல் மாகாணமான பாகிஸ்தானில் பாகிஸ்தானிய படையினர் தேடுதல்களை நடத்தியுள்ளதாக பாகிஸ்தானின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அல்கெய்டா தலைவர் பில்லேடன் பாகிஸ்தானில் இருப்பார் என்று அவர் கூறுகின்றார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் உள்ள மலைப்பாங்கான எல்லைப்பகுதியில் ஒஸாமா பின்லேடன் ஒளிந்து இருக்கலாம் என்று நம்புவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். (பி-9)



ஒஸாமாபின்லேடனின் படங்களில் தண்ணீர்த் தாங்கியை பாகிஸ்தானியர் ஒருவர் ஓட்டிச்செல்லும் கட்சி. பாகிஸ்தானில் ஒஸாமாபின்லேடனுக்கு இருக்கும் ஆதரவை இது காட்டுகிறது.

### *ஈராக் மீது யு.எஸ் .போர் தொடுத்தால்*

# 1இலட்சத்து 20ஆயிரம் கோடி மாத மொன்றுக்கு செலவாகும்

(வாஷிங்டன்)

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டால் முதல் மாத போர்ச்செலவு ரூபா 1இட்சத்து 20ஆயிரம் கோடி அளவுக்கு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற பட்ஜெட் அலுவகலகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள இதர விபரம்:

ஏற்கனவே வளைகுடாப்பகுதியில் தயார்நிலையில் அமெரிக்கப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. போர் தொடங்கியதும் கூடுதலாக தரைப்படையினரை ஈராக் நாட்டுக்கு அனுப்பிவைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கு வழக்கமான செலவுடன் கூடுதலாக ரூ. 70ஆயிரம் கோடி செலவாகும்.

போர் மும்முரமானவுடன் முதல் மாதச் செலவு மட்டும் ரூ.50ஆயிரம் கோடியாக இருக்கும்.

அதன்பின்னர், செலவு மாதத்திற்கு ரூ.40ஆயிரம் கோடியாக இருக்கும். போர் முடிந்தபின்னர் பாசறைக்குத் திரும்பும் அமெரிக்கப்படை யினருக்கான செலவு ரூ.45ஆயிரம் கோடியாக இருக்கும்.

வெற்றிக்குப்பின்னர் ஈராக்கை கைப்பற்றுவதற்கான செலவு ரூ.5ஆயிரம் கோடியிலிருந்து ரூ.20ஆயிரம் கோடிவரையிருக்கும். (பி)



ஈராகின் வடபகுதியில் சதாம் ஹுசைனுக்கு எதிராகப் போராடி வரும் குர்து இனத்தவர்கள், சதாமின் போர் விமானங்களும், பீரங்கிப்படைகளும் தாக்கினால் தப்பிப்பதற்காக, பூமிக்கடியில் உள்ள இதைப் போன்ற 60குகைகளை பதுங்கு குழிகளாகப் பல ஆண்டுகளாகவே பயன்படுத்தி வருகின்றனர்.

# ஒஸாமா பின்லேடனை தேடும் பணி தொடர்கிறது

(வாஷிங்டன்)

அமெரிக்கப் படைவீரர்கள் ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின்லேடனையும், அவருடைய அல்கெய்டா இயக்க உறுப்பினர்களையும், தொடர்ந்தும் தேடிவருகின்றனர்.

அண்மையில் இவர்கள் மேற்கொண்ட தேடுதலில் அல்கொய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படும் 7பேரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் ஆப்பகானிஸ்தானில் உள்ள படைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு தயாரிப் பதில் ஈடுபட்டிடுக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஆப்கானிஸ்தானில உள்ள அமெரிக்க இராணுவ் பேச்சாளர் தெரிவித்தார் (பி-9)

# *சீனாவில் நடமாடும் மரணதண்டனைக்களம்*

(பெய்ஜிங்)

மரணதண்டனை க்களத்திற்கு குற்றவாளியை அழைத்துச்சென்று மரணதண்டனையை நிறை வேற்றுவது அந்தக்காலம். இப்போது குற்ற வாளி எங்கு இருக்கிறாரோ அங்கே வந்து மரண தண்டனையை நிறைவேற்றுவது இந்தக்காலம். இதுநடப்பது சீனாவில். இதற்காக தனி மரண தண்டனைவேன்கள் உலா வருகின்றன.

சீனாவில் சமிப காலமாக விஷ ஊசி போட்டு மரண தண்டனையை நிறைவேற்றுகின்றனர். இதற்காக விஷஊசியை கொண்ட வேன்கள் ஆங்காங்கே அனுப்பப்படுகின்றன.

குற்றவாளி இருக்கும் இடத்திற்கு அந்த வேன்வரவழைக்கப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்றது. உள்ளுர் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது. (பி)

# முகாமைத்துவப் பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயத் திணைக்களங்களிலும் கடமையாற்றுகின்ற 500கல்விமுகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கும் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சிகளை வழங்க மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் நன்மைகருதியும் தமிழ், சிங்கள் இருமொழிகளிலும் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(உ-10)

# பொலிஸாரின் நடிப்பில் ஏமாந்த திருடர்கள்

## கெகிராவையில் சம்பவம்

(கொழும்பு)

பல லட்சம் ரூபா பெறுமதியான யானைத் தந்தங்களை பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த திருடர்கள் தந்தம் வாங்கும் வியாபாரிகள் போல் நடித்து பொலிஸார் மடக்கிப பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் அனுராதபுரத்தில் கெகிராவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பல லட்சம் ரூபா பெறுமதியான யானைத்தந்தங்களை சட்டவிரோதமான முறையில் சில குழுவினர் பதுக்கிகெகிராவ பிரதேச சேனையொன்றில் மறைத்து வைத்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து யானைத் தந்தங்களை வாங்கும் வியாபாரிகள் போன்று நடித்து சென்ற பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களில் 4 பேரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் இதுதொடர்பான தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(உ-10)

## காணாமல் போனோர் சங்கம்

# ஏப்ரல் 30 ந்கு முன்பதாக பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன முக்கிய சந்திப்பு ஒன்று எதிர்வரும் ஏப்ரல் 30ம் திகதிக்கு முன் இடம பெறும்.

காணாமல் போனோர் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றபோதே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பைச் சேர்ந்த பார்ராளுமன்ற உறுப்பினர் கே. சிவாஜிலிங்கம், காணாமல் போனோர் சங்கச் செயலாளர் சற குணம் உட்பட பெருமளவினர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட ஏனைய விடயங்களாவன, காண்மல் போனோர் தொடர்பாக பிரதமர் ரணிலை சந்திப்பதற்காக பிரதமரின் செயலரால் எமக்கு வழங்கப்பட்ட காலக்கெடு மார்ச் 7ம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. இது சம்பந்தமான எந்த ஒரு பதிலும் எமக்கு இது வரையில் தரப்படவில்லை.

எனவே நான் மேற்கண்டமுடிவை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. பிரதமரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் மேற்கொள்வதாக உறதி அளித்துள்ளார்.

பிரதமரை சந்திக்கும் குழுவில் ஆண்கள், பெண்கள் உட்பட 6 பேர் கலந்து கொள்ள உள்ளனர்.

இக்குழுவினர் பிரதமர், மற்றும் பிரதமரின் செயலர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, புனர்வாழ்வு செயலர் ஆகியோரையும் சந்திக்க உள்ளனர்.

(க-07)

## யாழ். குடாநாட்டில்

# கண்ணிவெடி அகற்றும்பணி அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதத்திற்கு இடையில் யாழ். குடாநாட்டில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பமாகும் என கண்ணிவெடி அகற்றும் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் பயிற்சியில் ஈடுபட்ட கண்ணிவெடி அகற்றும் குழு இன்னும் சில தினங்களில் தம் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறியதுடன் இப்பணிகள் ஆரம்பமாகும்.

தற்போது பயிற்சி பெற்று வெளியேறிய குழு யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட இடங்களில் உள்ள மிதி வெடிகளை முதல் கட்டமாக அகற்றவுள்ளது.

இவ் எல்லைக்குள் மக்கள் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாலும் நகரப்பகுதியாக இருப்பதாலும் அதனுடைய அவசியத்தை கருத்தில் கொண்டு முதல் கட்ட நடவடிக்கையாக இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப் படும்.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேசங்களில் இப்பணிகள் விஸ்தரிக்கப்படும். இப்பணிகளுக்கு என குழுக்கள் தற்போது கடுமையான பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

(க-04)

## ஆன்மீக முகாம்

(பருத்தித்துறை)

இலங்கை சின்மயாமிஷன் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் அனுசரணையுடன், இளைஞர் பெரியவர்களுக்கான 10 நாள் ஆன்மீக முகாம் ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம 23 ஆம் திகதி வரை வுல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சின்மயாமிஷன் ஆச்சாரியாரான பிரம்மச்சாரி ரமணசைதன்யா சுவாமிகளின் வழிநடத்தலில் இவ் ஆன்மீக முகாம் இடம்பெறவுள்ளது.

இளைஞர்களுக்கான ஆன்மீக முகாம் 14ஆம் திகதி முதல் 5 நாட்களும் பெரியவர்களுக்கான முகாம் 20 ஆம் திகதி முதல் 5 நாட்களுக்கும் நடைபெறவுள்ளன.

இம் முகாம்களிலே தியானம், சிந்தனையைத் தூண்டும் ஆன்மீகக் கருத்துரைகள், ஆளுமையை வளர்க்கும் பயிற்சிப்பட்டறைகள், ஐயம்தெளிவிக்கும் கேள்வி பதில்கள், பஜனை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-52)

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண அன்னை சாரதாம்பாள் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் புகைப்படக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கண்காடசியை வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் திறந்து வைக்கவுள்ளார். (த-5)

## கூட்டம்

(சில்லாலை)

இளவாலை - புனித கென்றியரசர் கல்லூரியின் வருடாந்த பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி புதன் கிழமை பி.ப 1.45 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வணபிதா ஜேம்ஸ் சிங்கராயர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (உ_58)

## நன்கொடையை அதிகரிக்குக!

(பருத்தித்துறை)

சமூகநலன்புரி அமைச்சு வட-இலங்கை ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல ஆச்சிரமத்திற்கு வருடாவருடம் வழங்கி வரும் நன்கொடைப் பணத்தினை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆச்சிரம தர்மகார்த்தாசபை சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீரவை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

இவ் ஆச்சிரமத்தேவைகள் பற்றிய மகஜர் ஒன்று சமூக நலன்புரி அமைச்சர் ரவிசமரவீரவிடம் கையளிககப்பட்டது. இம்மகஜரை ஆச்சிரமத்தின் சார்பில் வர்த்தகர் எஸ். சுந்தரலிங்கம் அமைச்சிடம் கையளித்தார். (உ-52)

## மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியேறிய 402 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக தலா 25 ஆயிரம் ரூபா நிதிவழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

செம்பியன்பற்று தெற்கு, செம்பியன் பற்று வடக்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 402 குடுமபங்களுக்கே இம் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (உ-52)

## அக்குரசை தேர்தல் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற அக்குரசை பிரதேசசபைதேர்தலின் போது கட்சிகள் எதுவும் தனிப்பெரும்பான்மையை பெற்றிருக்கவில்லை.

நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட முடிகளின் படி, பொது ஜன ஐக்கிய முன்னணி 15ஆயிரத்து 84 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களையும், மக்கள விடுதலை முன்னணி 11 ஆயிரத்து 538 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்களையும், சிங்க மகா சம்பந்த பூமி புத்திரகட்சி 10 ஆயிரத்து 381 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும் பெற்றுள்ளன. (க.8)

## செய்தி மடல் வெளியீடு

(ஈச்சமோட்டை)

இணைந்த கரங்கள் எனும் பெண்கள் விழிப்புணர்ச்சி ஒன்றியத்தினால் இரு மாதங்களுக்கொரு முறை "தலைவி" எனும் பெண்களின் உணர்வுகளை வழிப்படுத்தும் செய்தி மடல் வெளியிடப்படுகின்றது.

இலக்கம் 49/1 வெலிகடவீதி, ராஜகிரிய எனும் முகவரியில் இயங்கும் இவ் ஒன்றியத்தின் செய்தி மடலில் பெண்கள் அபிவிருத்தி, பெண்கள் விழிப்புணர்ச்சி, பெண்கள் உரிமை பற்றிய கட்டுரைகள், கவிதைகள் செய்திக் கடிதம் என்பன அடங்கியுள்ளன. (க-59)

## தாண்டிக்குளம் முதல் ஓமந்தைவரை

# உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர்வு

## இன்று முதல் ஆரம்பம்

(வவுனியா)

வவுனியாவில் ஏ-9 பாதையினை மையமாகக் கொண்ட தாண்டிக்குளம முதல் ஓமந்தை வரையான உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இன்று திங்கட்கிழமை முதல் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுளனர்.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட அரசஅதிபர் கே. கணேஷ் தலைமையில் அரச செயலகத்தில் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வன்னிப் பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற துறைப்பொறுப்பாளர் மற்றும் பிரதேச செயலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பகுதியில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப் படுத்தப் பட்ட 38 கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்றும் இவற்றில் மக்கள் பாதுகாப்பிற்காக கண்ணிவெடி அகற்ற வேண்டி இருப்பதாகவும் அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் பகுதியில் உள்ள 5 கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றப் பட்டுவிட்டதாக வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் எவ்.எஸ். ரி. நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஏ-9 வீதியினை மையமாகக் கொண்ட தாண்டிக் குளம முதல் ஓமந்தை வரையான உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் மக்கள் சென்று வரவும் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க-10)

## மட்டு - அம்பாறை

# சிரான் கூட்டம் நேற்று ஆரம்பம்


(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்வதற்கான இரண்டாவது சிரான் கூட்டம் நேற்று ஆரம்பமாகியது.

கிழக்குப்பல்கலைக்கழக மண்டபத்தில் இக்கூட்டம் நேற்றும் இன்றும் நடைபெறுகிறது.

இம்மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பான முதலாவது கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி போன்ற 30க்கும் மேற்பட்ட துறைசார் திட்டங்கள் திணைக்களத் தலைவர்களினால் சமர்ப்பிக்கப் பட்டன.

இக்கூட்டத்திற்கு மட்டக்களப்பு அரச அதிபர் இ.மோனகுருசாமி, சிரான் திட்டப்பணிப்பாளர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ்,மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (க-08)



யா/ சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் மங்களவிளக்கேற்றுவதையும், சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டவலம்புரி ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த கவிஞர் சு. துரைசிங்கம், பாடசாலை அதிபர் திரு. பொ. கணேஸ்வரலிங்கம் உடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இடைவேளை நிகழ்வின் போது மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்ச்சியினை படத்தில் காணலாம்

# வலம்புரி நடத்திய தரம் ஏழு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி இல - 2 முடிவுகள்

1ம் இடம் : செல்வி சோபனா கணபதிப்பிள்ளை
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம்
2ம் இடம் : செல்வி க. யஸ்மிலா
மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்
3ம் இடம் : செல்வி சிந்து சச்சிதானந்தபிள்ளை
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்

* செல்வி ஜனனி அமிர்தலிங்கம்
  யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
* செல்வி. சக்திதாசினி சந்தான குமாரசர்மா
  யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்
* செல்வி. வினோஜா சிவராசா
  வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம்.
* செல்வி ஜெயதீபா விக்கினேஸ்வரன்
  நயினாதீவு மகாவித்தியாலயம்
* செல்வி அஜந்தனா சிவகுமாரன்
  சன்மார்க்க மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்
* செல்வி டயானா பாஸ்கரன்
  வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
* செல்வி கௌசன்யா ஜீவநாதன்
  சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
* செல்வி த. தர்சிகா
  மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்.
* செல்வி அ. ஆர்த்திகா
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் புத்தூர்
* செல்வி டயானா அழகரத்தினம்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் புத்தூர்
* செல்வன் ச. கோபிகன்
  கொக்குவில் இந்துக் கல்லூரி கொக்குவில்.
* செல்வி. தனுசிகா
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி ஜெனனி செல்வராஜா
  மல்லாகம் மகா வித்தியாலயம் மல்லாகம்.
* செல்வன் காசிலிங்கன் கஜன்
  மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை
* செல்வி கஜனி இராசதுரை
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வன் ச. குஜிந்தன்
  யா/ கனகரத்தினம் மகாவித்தியாலயம்
* செல்வி தனுஷகா செல்வராஜா
  மல்லாகம் மகாவித்தியாலயம் மல்லாகம்
* செல்வி திவ்வியா நாகேந்திரம்
  யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
* செல்வன் பாலசுப்பிரமணியம் அங்குசன்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி தர்சிகா செல்வராஜா
  மல்லாகம் மகாவித்தியாலயம் மல்லாகம்
* செல்வி சி. நிரோஜா
  மருதடி அறநெறிப் பாடசாலை மானிப்பாய்
* செல்வி ப. நிமாலினி
  மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்
* செல்வி த. தசிந்தாதேவி
  மருதடி அறநெறிப் பாடசாலை மானிப்பாய்
* செல்வி சுபர்ணா சீவரத்தினம்
  அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம் அச்சுவேலி
* செல்வன் மார்க்கண்டு ரேகாதீபன்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்
* செல்வி பானுஜா இராஜலிங்கம்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்
* செல்வி அ. மகிழினி
  மருதடி அறநெறிப்பாடசாலை
* செல்வி லோ. அஜந்தா
  மல்லாகம் மகாவித்தியாலயம்
* செல்வி நா. பிரியதர்சினி
  மருதடி அறநெறிப்பாடசாலை
* செல்வி மிதுலா துரைராஜசிங்கம்
  மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய்
* செல்வன் ஈஸ்வரதாஸன் பகீரதன்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வன் இராசதுரை டினேஸ்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வன் சிவராஜா தினேஷ்
  யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்
* செல்வி சாருஜா சண்முகானந்தன்
  சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
* செல்வி செ. மயூரி
  மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை
* செல்வன் கந்தசாமி சதீஸ்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி பானுஜா தர்மகுலசிங்கம்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி சமீரா சிவேனேஸ்வரன்
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி சௌமியா ராதாகிருஷ்ணமூர்த்தி
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி சிந்துஜா ஜெயபாலசர்மா
  ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
* செல்வி ப. மேனகா
  மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்
* செல்வன் நா. கண்ணன்
  மருதடி அறநெறிப் பாடசாலை மானிப்பாய்

கட்டுரைப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் 15.03.2003 சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வலம்புரிக் கேட்போர் கூடத்தில் நடை பெறும். பரிசிற்கும், சான்றிதழுக்கும் உரியவர்களை தவறாது வருகை தரும்படி அழைக்கின்றோம்.

பரிசில்கள் அமரர் கலாநிதி க. கனகராசா (மில்க்வைற்) அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் அவர்களை வழிநடத்திய ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

# திக்கம் வடிசாலையை மீண்டும் இயக்க இந்து கலாசார அமைச்சால் முடியும்

## - அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை மீண்டும் இயங்கவைக்க இந்து கலாசார அமைசசினால் முடியும் என அமைச்சர் தி. மகேஸ்வரன் வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி ஊழியர் மத்தியில் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் வைத்து பனை தென்னை வள அபிவிருததி நிலைய்த் தின் குறைகளை நேரடியாக கேட்ட அவர்,

மேலும் தெரிவிக்கையில், நான் இந்து கலாசார அமைச்சராக பதவி ஏற்ற காலத்தில் இருந்து இவ் வடிசாலை என் அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. இதன் போது இது சிறப்பாக இயங்கி பலருக்கு பயனளித்து வந்தமை அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் சில தீயசக்தியின தூண்டு தலால் மேற்கொள்ளப்பட்ட உண்ணா விரதப் போராட்டத்தை தொடர்ந்து இவ் வடிசாலை எம்மால் கைவிடப் பட்டது.

இதனால், தற்போது 50 ஆயிரம் லீற்றர் கள் வீணாக நிலத்தில் ஊற்றும் நிலை ஏற்பட்டுளளது. இதற்கு இவ்வடி சாலை தொடர்ந்து இயங்காமையே காரணம். இந்நிலைமை தொடர்பாக நான் மந்திரி சபையில் விடுத்த வேண்டுகோளின் படி மீண்டும் அதை இயங்க வைக்க பணிப்பு கிடைத் துள்ளது. இதனால் எம் அமைச்சு இதனை மீண்டும் திறம்பட நடத்த உத்தேசித்துள்ளது.

இத்தீர்மானம் ஜனாதிபதியால் கைச்சாத்திடப்பட்ட பின்னரே இப் பணிகள் ஆரம்பமாகும். இது கைச் சாத்திட இன்னும் ஒரு மாதகால அவகாசம் தேவைப்படும் என எதிர் பார்க்கப் படுகிறது என்றார். (க-04)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(அராலி)

வலி-கிழக்கு பிரதேச செயலக மார்ச் மாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டமும் நடை பெறும். (க-8,214)

## வருடாந்த உற்சவம்

(அராலி)

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள ஆலய வருடாந்த மகோற்ச வம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

இவ்வாலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் எதிர்வரும் 17,18,ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (க-214,8)

## நியமனம்

(கொக்குவில்)

யாழ். பல்கலைக்கழகத்தின் நிதிக்கிளை எழுதுநர் பாலசிங்கம் பால்தாஸ் கிழக்கிலங்கை பல்கலைக கழகத்தின் நிதி உதவியாளராகவும் விவசாய பீடாதிபதி அலுவலக எழுதுநர் செல்வலிங்கம் திருவருட் செல்வன் கிழக் கிழங்கை பல்கலைக் கழகத்தில் உதவி உள்ளகக் கணக்காளராக நியமிக்கப்பட்டுள் ளார். (க-32-8)

## சமுர்த்தி அலுவலர் மன்றம் அங்குரார்ப்பணம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோ கஸ்தர் மன்றம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரின் வேண்டுகோளிற்கு இணங்க அங்குரார்ப்பணம் செய்யப் பட்ட இந்நிகழ்வுக்கு, உதவிப் பிரதேச செயலாளர் எஸ். செல்வராஜா தலைமை தாங்கினார்.

அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இம்மன்றத்தின் தலைவராக எஸ்.கே. ஆனந்தவேலும், செயலா ளராக வதனியும், பொருளாராக சதீஸூம், உபதலைவராக எஸ்.பாஸ் கரனும், உபசெயலாளராக தர்சிகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-258,8)

## முக்கிய கலந்துரையாடல்

(மணக்கும்பான்)

யாழ். பிரதேச செயலகத்திற்குட் பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெறஉள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் இளைஞர் கழகங்களுக்கிடை யிலான 2003ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட இருப்பதால் அனைத்து இளைஞர் கழகத்தலைவர்கள், செயலாளர் களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு பிரதேச செயலக இளைஞர் கழக அதிகாரி கேட்டுள்ளார். (க-5)

# ஊனமுற்றோர் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

## ஜனாதிபதியின் சகோதரி தலைமைவகித்தார்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலா மன்றத்தின ரின் ஆதரவுடன் சுனேத்ரா பவுண்டேசன் நிறுவனத்தினர் ஊனமுற்றோருக்கு தன்னம்பிக்கையை உருவாக்கும் வகையிலான ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ். செயலகத்திற்கு அருகாமையில் உள்ள வை.எம்.சி.ஏ கிறிஸ்தவ இளைஞர் சங்க மண்டபத் தில நேற்று ஆரம்பித்து வைக்கப்பட் டது.

சுனேத்திரா பவுண்டேசன் நிறுவனத் தின் தலைவியும் ஜனாதிபதி சந்திரிக்கா குமரதுங்காவின் மூத்த சகோதரி யுமான சுனேத்திரா பண்டாரநாயக்கா வின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உருவாக்க நெறியி யலாளர் றொகான் தேவா, உருவாகக நெறிதுறையாளர் எம். றமணி தமயந்தி ,ஜேர்மனிய உதவி உருவாக்க நெறியிய லாளர் வுல்ஸ்ஹென்றன்கோ ஆகியோர் உட்பட யாழ்ப்பாண ஊனமுற்றவர்களை பராமரிக்கும் நிறுவனத்தவர்களும் ஊனமுற்ற நிறுவனத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட. 40 பேரும் கலந்து கொண்டனர்.

சுனேத்திரா பண்டார நாயக்கா கருத்து வெளியிடுகையில், ஊனமுற்ற வர்கள் சமூகத்தில் தனித்து வாழ முடியும் என்ற நம்பிக்கையை அவர் களிடத்தில் உண்டாக்குவதற்காகவே இவ்வாறான ஒழுங்குகளை செய்து வருகிறோம். அவர்கள் சமூகத்தில் ஏனையவர்களை போல உலக இன்பத்தை மனசந்தோசத்துடன் அனுபவிக்க வேண்டும்.

இவர்களை இனமத பேதம் கொண்டு பாகுபடுத்தக்கூடாது. அவர் களும மனிதர்களே. அவர்களுக்கும் ஏனைய மனிதர்கள் போல் உணர்வு கள், ஆசைகள்என்பன உண்டு. அதற்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

யுத்தம் மற்றும் பிற காரணிகளால் பாதிப்படைந்த பலரை நான் பார்த் திருக்கின்றேன். அவர்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது குறிக் கோள். மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள். அவர்களின் இனம், மதம் மாற்றம் அடைந்தாலும் குணம், உருவம், உணர்ச்சி எல்லாம் ஒற்றுமைப்படுகிறது.

இவ் ஒற்றுமை என்றும் நிலைக்க வேண்டும். இத்தகைய நிலைப்பாடு உருவாகி சமாதானம் ஏற்பட்டு ஊன முற்றவர்களும் தன்னம்பக்கை யுடன் இச் சமாதான இன்பத்தில் மூழ்க வேண்டும் என்றார்.

(க-4)




ஊனமுற்றவர்களுக்கான தன்நம்பிக்கையூட்டல் பயிற்சி பட்டறைக்களை நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதியின் மூத்தசகோதரி சுனேத்திரா பண்டார நாயக்காவையும் பயிற்சியில் ஈடுபட்டிருப்போரையும் படத்தில் காணலாம் படங்கள் : க. பவன்

# உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்

## -ஹொங்கொங் பல்கலைக்கழக பேராசிரியர் யாஸ்ஹாய் தெரிவிப்பு

(தென்மராட்சி)

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டுமாயின் அது உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலேயே முன் னெடுக்க முடியும். உள்ளக சுயநிர்ணயம், வெளிவாரி சுய நிர்ணயம் என்பன விரிந்த பொருளைக் கொண்டனவாகும்.**

ஹொங்கொங் பல்கலைக்கழக பேராசிரியரும், கென்யா நாட்டின் அரசியல் அமைப்பு மறு பரிசிலனைக் கமிசனின் தலைவலருமான பேராசிரியர் யாங்ஹாய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டத்தரிப்பில் கலாநிதி மரியோன கோபேஸ் தலைமையில் இடம் பெற்ற 'சுயநிர்ணயமும் அதிகார பகிர்வும்' என்ற விடயம் தொடப்பான ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

தொடர்ந்தும் தனது உரையில், சுயநிர்ணயம் என்பது மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு ஒரு அடித்தளமாகும்.அதுமீறப்பட்டால் மற்ற உரிமைகளும் மீறப்படுகின் றன என்ற பொருளாகும். சுயநிர்ண யம் மீறப்படுகின்ற போது அது மனித உரிமை மீறலாகக்கருதப்படும்.

உள்ளக சுயநிர்ணயத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்தும் அது தோல்வியில் முடிந்தால் வெளிவாரி சுயநிர்ணயத்தை அடைவதற்கு அது மக்களுக்கு ஒரு ஆதாரமாகயிருக்கும்.

வெளிவாரி சுயநிர்ணயம் என்பது ஒரு முறிவைக் கொண்டு வரும். ஆனபடியால், அதை ஆதரிப்பதற்கு முன்பு அதன் நன்மை, தீமைகளைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த வெளிவாரி சுயநிர்ணயம் என்பது உண்மையிலேயே பிரச்சினைகளைத் தீர்த்து விடுமா? அண்மையிலுள்ள நாடுகளின் நிலைப்பாடுகள் என்ன? பாகிஸ்தான், இந்தியா பிரிவு வந்தது ஆயினும் இப்போதும் முறுகல்நிலை இருக்கின்றது.

சர்வதேச சமூகம் இதனை இப்போது பெரிதாக ஆதரிப்பதாக இல்லை. அத்தோடு உள்ளக சுயநிர்ணயம் என்று சொல்லும் போது, அது ஜன நாயகமாக மறுவதை மாத்திரம் அது கொள்ளவில்லை. பாராளு மன்றத்தை மக்கள் பரவலாக பிரதி நிதித்துவப் படுத்தும் அரசாங்கத்தைக கொண்டுள்ளதை மாத்திரம் குறிக்கும் பொருள் அல்ல.

### ஜனநாயக கருத்து

மாறாக வெவ்வேறு சமூகங்களுக்கிடையே உள்ள தொடர்புகளை அவறறை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது,சீர்படுத்துவது என்பதில் தான் ஜனநாயகம் என்ற கருத்து முக்கியமாக அடங்கியுள்ளது. இந்த உறவுகள் சிக்கலானவை. அது பல கோணங்களில் இருந்து ஆராயப்பட்டு அதன்படி தான் அது என்ன வடிவத்தைக் கொண்டிருக்க முடியும் எனத்தீர்மானிக்கலாம்.

உள்ளக சுயநிர்ணயம் இது பெரு மளவு நெகிழ்ச்சித் தன்மைகள் கொண் டுள்ளது. சுயநிர்ணயம் என்பது ஒரு நாட்டின் உள்நாட்டுச் சட்டத்துக்கு உள்ளானது. வட்டுக்கோட்டைத்தீர் மானத்தில் உள்ளக சுயநிர்ணயம், வெளிவாரி சுயநிர்ணயம் என்ற அடிபபடையிலே கருத்து முன்வைக் கப்பட்டது. திம்பு பேச்சுவார்த்தையில் சுயநிர்ணயம் என்பது சமஷ்டி என்ற அடிப்படையிலேயே பேசப்பட்டது.

இப்போது அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் உள்ளக சுயநிர்ணயம் பற்றியே கூடுதலாகப் பேசப்பட்டு வருகின்றது. இரண்டு பகுதியிலும் நிலைப்பாட்டில் ஒரு மனமாற்றம் ஏற்பட்டுள்ளது.

மறுபுறம் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வு காணும் நிலையும் காணப்படுகின்றது.

முக்கியமாக உள்ளக சுயநிர்ணய உரிமை மனித உரிமைகளை வழங்கும ஒரு அமைப்பாக இருக்கவேண்டும் அது சுயஆட்சியுமாகும் எனக் குறிப்பிட்டார்.

காமன்வெல்த் திட்டத்தின் திட்ட இணைப்பாளரான கலாநிதி ஹெலனா வோல் அங்கு கருத்துரையாற்றும் போது ,

தற்போது சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கும் அரசும்-புலிகளும்,தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய அடிப படையில் தீர்வுகாண வேண்டும் என்று முன்வந்துள்ளமை வரவேற், கப்பட வேண்டியதாகும் தமிழ் மக்களின் உரிமைகளை சுயநிர்ணய அடிப்படையில் வழங்குவதற்கு நீண்ட காலமாக அரசாங்கங்கள் மறுத்து வந்துள் ளன.அதனால் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக பல்வேறு வழிகளில் போராடிவந்தனர்.

சுயநிர்ணயம் என்பது அவர்களது அரசியல்,சமூக,பொருளாதார,கலாசார விதியை நிர்ணயிப்பதாகக்கருதப் படும். அத்துடன்,இப்போது இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களுடைய மனித உரிமைகள் பாதுகாக்கவும், பேணவும் வழிவகுக்கும் என எதிர்பார்க் கலாம்.

### போர்அவசியமற்றது

மேலும் தமிழ் மக்களின்உள்ளக சுயநிர்ணயத்துக்கான உரிமைகள் மறுக்கப்படின், அவர்கள் வெளிவாரி சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கு தள்ளப்பட வேண்டிய நிலைமை உருவாகுவது தவிர்க்கப்பட முடியாதது என புலிகளின் தலைவர் தனது மாவீர்தின உரையில் குறிப்பிட்டுள்ளமையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். எது எப்படியிருப்பினும் தமிழ் மக்களுக்கு இன்னும் ஒரு போர் அவசியமற்றது. சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இடம்பெற வேண்டும். உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். சிதம்பரநாதன் மற்றும் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா ஏ.ஜே.பேர்ணட் அடிகள் உட்பட பிரமுகர்கள் பலர் உரைநிகழ்த்தினர்.

இவ் ஆய்வுப்பட்டறையில் யாழ். மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சமாதான ஆர்வலர்கள்,விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (க-77)

# பாலைதீவு திருநாள் கொண்டாட்டம்

(குருநகர்)

புகழ்பெற்ற பாலைதீவு அர்ச்: அந்தோனியார் தேவாலயவருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இம் மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறுமெனத்தெரிவிக் கப்படுகிறது.

குருநகர் ஊடாக பக்தர்கள் ஆலயத்துக்கு சென்று வர அனுமதியைக் கோரி,பொது அமைப்பு பிரதிநிதுகள் கேட்டிருந்ததற்கு இன்னமும் படைத்தரப்பால் அனுமதி வழங்கப்படவில்லை.

இதேவேளையில்,வன்னியில் இருந்து வலைப்பாட்டுப் பங்குத் தந்தை தலைமையில் செல்லும் குழு ஆலய திருநாள் திருப்பலியை நிறைவேற்றும் என்றும்,

அந்தத் திருநாள் திருப்பலியில் வன்னிப்பிராந்நியத்தில் இருந்து செல்லும் யாத்திரிகர்கள் பெருமளவில் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-74)

# குடிநீர் தாங்கி கூரைகள் சேதம்

(குருநகர்)

பாலைதீவு அர்ச்: அந்தோனியார் தேவலாய சூழலில் நிறுவப்பட்டிருந்த பாரிய குடிநீர்தாங்கிகள் மூன்றின தும் மேற்கூரைகள் சேதமடைந்துள்ளதாக சமீபத்தில் அங்கு சென்று திரும்பிய குருநகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாத்திரை செலலும் பக்தர்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒவ்வொன்றும 50ஆயிரம் கலன் குடிநீரை தேக்கி வைக்கும் நோக்கில் மேற்படி குடிநீர் தாங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. (க-74)

# முன்னுரிமையின் அடிப்படையில் 3000 பேருக்கு தொலைபேசி

## மா.அபி. குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தின், மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். குடா நாட்டின் அபிவிருத்தித் திட்டம் குறித்தும், கடந்த காலங்களில், குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இக கூட்டத்தில் கலந்து கொண்டரெலிக்கொம் பொது முகாமையாளர்,1998ஆம் ஆண்டுக்கு முன்னர் தொலைபேசிக்காக விண்ணப்பித்தவர்களில் மூவாயிரம் பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புவழங்கப்படுமென்று தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்;

ஆசிய அபிவிருத்தி வங்கி,வீதி அபிவிருத்திக்கு 32.7 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும்,இந் நிதியைப் பயன்படுத்தி மாமுனை கட்டைக்காடு வீதி செப்பனிடப்படுமென்றும் கூறினார்.

யாழ்போதான வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமெனவும்,படையினர் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவதை நிறுத்த வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கூட்டத்தில் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி, ந.ரவிராஜ்,கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும்,யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனும் கலந்து கொண்டனர். (இ-43,7,4)

# இலங்கையில் வர்த்தக வலயங்கள் திட்டம் வகுப்பதில் இந்தியா முனைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் ஆரம்பிக்கப் படவுள்ள வர்த்தக வலயத்திட்டத்தின் கீழ் இலங்கையிலும் வர்த்தகவலயங்களை அமைக்க இநதியா திட்டமிட்டுவருகிறது.

இந்திய வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ராஜீவ் பிரதாப் கண்டியில நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்து பேசிய அமைச்சர் இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையில் பாலம் ஒன்று அமைக்கப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மேலும் வலுப்பெறும் எனவும் சுட்டிக்காடடியுள்ளார்.

அத்துடன் சமூக ,கலாசார,பொருளாதார,சமய உறவுகளும் இப் பாலத்தை அமைப்பதன் மூலம் மேம்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இவ்விரு நாடுகளுக்கும்இடையேவர்த்தக பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணா நாயக்கவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட தாகவும் தெரிவித்துள்ளார். (க-8)

# சகல திணைக்களங்களிலும் தகவல் சேகரிப்பு அலுவலர் நியமனம்

(சுதுமலை)

இலங்கையில் உள்ள சகல அரசாங்கத்திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அமைச சுக்கள், கூட்டுத்தபானங்களில் தகவல் சேகரிபபு அலுவலர்கள் நியமிக் கப்பட உள்ளார்கள்.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களச் செயலாளர் கே.ரி.ரி.வி.ஜயசேகராசகல அமைச்சின் செயலாளர்களிற்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஒவ்வொரு திணைக்களத்திலிருந்தும் இளம் அலுவலர்கள்3பேர்தெரிவுசெய்யப்பட்டு அவர்களிற்கு தகவல் தொழில் நுட்பம் தொடர்பான விசேட பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இதன் மூலம் தகவல் சேகரிப்பு பணிகள் திணைக்களங்கள் வாயிலாக இலகுவாக்க முடியும்.இதற்கான பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. (க-252-8)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# மீளக் குடியமர்வுக்கு மனிதாபிமான உதவி

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இவ்வாண்டுமுதல் மக்களை மீளக் குமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது.

இதன பிரகாரம் அம்பாறை மாவட் டத்தில் தங்கவேலாயுதபுரம், திருகோணமலை மாவட்டத்தில் விவசாயபுரம்,மன்னார்மாவட்டத்தில் சர்வபுரி, கிளிநொச்சிமாவட்டத்தில் தம்பலகாமம், மட்டக்களப்பு மாவட்டத்தில் புல்லுமலை, வவுனியா மாவட்டத்தில் கல்மடு, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆழியவளை, முல்லைத்தீவு மாவட்டத்தில ஒட்டமாவடி ஆகிய இடங்களில் இத்தகைய மீள்குடியமர்வு இடம் பெற்றுள்ளது.

அததுடன், புனர்வாழ்வு,புனரமைப்பு அமைச்சின் உதவிகளுக்கு அப்பால் மீளக் குடியமரும் மக்களின் நலன் கருதியேஇச்செயற்திட்டம் நடைமுறைப் படுததப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# விடுதலைப்புலிகள் தலையீட்டால் சுண்டுக்குழியில் மோதல் தணிவு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் இடம் பெற்ற கோஷ்டி மோதல், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தலையீட்டால் தணிந்துள்ளது.

முட்டை அடிச்சம்பவமே இக் கோஷ்டி மோதலிற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கத்திகள், வாள்கள், பொல்லுகள் போனற ஆயுதங்கள் தாராளமாகப்பயன்படுத்தப்பட்டதாகவும் வீடு ஒன்று சேதப்படுத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தினால் மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், அச்ச உணர்வு நிலவுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள் ளனர். (க-59)

# வவு.மாவட்ட அபிவிருத்திக்கு 'சிரான்' உபகுழு அனுமதி

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பல்வேறு திட்டங்களுக்கு உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத்தேவைகளுக்கான (சிரான்) வவுனியா மாவட்ட உபகுழு அனுமதிவழங்கியுள்ளது.

மீள் குடியேறும் மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள பல திட்டங்கள் வீதிஅபிவிருத்தி,கல்வி, சுகாதார மேம்பாடு, நீர்விநியோகம், தொழில் முயற்சிகள் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற சிரான் கூட்டத்தில் அனுமதிவழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட உப குழுவில் அங்கீகரிக்கப்பட்ட இத் திட்டங்கள் யாவும் கிளிநொச்சியில் உள்ள சிரான் அமைப்பின் தலைமைச் செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாக சிரான் அமைப்பின் வவுனியா மாவட்ட உபகுழுவின் தலைவர் எழிலன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின்சிரான் அமைப்பின் வவுனியா மாவட்ட உபகுழுவின் தலைவர் எஸ். எழிலன், வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ நிறைவேற்றுப்பணிப்பாளர் திலகரட்ண ஆகியோர் சமுகம் கொடுத்திருந்தனர். (க-8)

## இன்று ஒரு தகவல்

# தானம் கொடுத்ததைத் தரம் பார்க்கலாகாது

இராமாயணத்தைச் சம்பந்தப்படுத்தி எத்தனையோ பழங் கதைகள் உண்டு. அவற்றிலும் சில நயங்கள் - கருத்துக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு கதை இது. இலங்கையில் எல்லாம் முடிந்தது... இராமர் இலங்கையை விபீஷணனுக்குத் தானமாகக் கொடுக்கிறார். அவனுக்கு மகுடம் சூட்டுகிறார். பட்டாபிஷேகம் முடிந்தது. அதன் பின் அங்கே என்ன வேலை? எல்லாரும் அயோத்திக்குப் புறப்படுகிறார்கள். பயண ஏற்பாடுகள் எல்லாம் மிக மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

அப்போது தான் சீதைக்கு அந்த அம்மிக்கல்லின் ஞாபகம் வந்துவிட்டது. அதாவது வேறு ஒன்றுமில்லை. அங்கே ஒரு அபூர்வமான அம்மிக்கல் இருக்கிறது. அதில் விசேஷசம் என்னவென்றால் ஒரு பொருளை அதில் வைத்து அரைத்தால், அந்தப் பொருளினுடைய இயற்கையான வாசனை இன்னமும் அதிகமாகுமாம். அந்தப் பொருளினுடைய தரமும், குணமும் கூட கூடுமாம். இப்படி இந்த அம்மிக்கல்லினுடைய விசேஷத்தைத் திரிசடை சொன்ன பொழுதே சீதை மனதில் ஒருசின்ன ஆசை. அயோத்திக்குப் போகிறபொழுது இதை எப்படியாவது கிளப்பிக்கொண்டு போய்விடவேண்டுமென்று!

இப்பொழுது அதற்கான நேரம் வந்துவிட்டது என்ன பண்ணுவது? புதுவிதமாக ஒரு பொருளைப் பார்த்துவிட்டால் எல்லாப்பெண்களுக்குமே இயற்கையாக வரக்கூடிய ஓர் ஆசைதான் இது! இப்பொழுது அதற்கு என்னபண்ணலாம் என்று யோசிக்கிறார். உடனே அனுமான் தான் இதற்குப் பொருத்தம் என்று தோன்றுகிறது. உடனே அனுமானைக் கூப்பிட்டு அந்த அம்மிக்கல்லைக் காட்டி, ''இதோ பாரப்பா... இந்த அம்மிக்கல்லைக் நீ எப்படியாது அயோத்திக்குக் கொண்டு வந்து சேர்த்துவிடவேண்டும்'' என்றார்.

சஞ்சீவி மலையையே பெயர்த்து எடுத்துக்கொண்டு வந்த அனுமனுக்கு இது ஒரு பெரிய வேலையா? உடனே அம்மியண்டை ஓடினார். சீதை ''சஞ்சீவிபர்வதத்தை எடுக்கின்ற போது காட்டிய உன்னுடைய முரட்டுத்தனத்தை இந்தச் சிறிய அம்மிக்கல்மீது காட்டினால் அது சுக்குநூறாக உடைந்து விடும். அதனால் மிகவும் ஜாக்கிரதையாக மெதுவாக அதை எடுக்க வேண்டும்!'' என்று எச்சரிக்கை கொடுத்தார். அனுமன் ''சரி!'' என்று சொல்லிவிட்டு தரையில் பதித்திருந்த அந்த அம்மியை எடுப்பதற்கு மெதுவாகக் கொத்த ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் அந்தப் பக்கமாக ஜாம்பவான் வந்தார்! வயதான பெரியவர்.

''என்னப்பா இது? எல்லாரும் ஊருக்குக் கிளம்பிக் கொணடிருக்கிற நேரத்தில் நீ இந்தக கல்லைப் பெயர்த்துக் கொண்டிருகக கிறாய்'' என்றார் ஜாம்பவான் ''இது சீதாபிராட்டியாரின ஆணை'' என்றார்ஆஞ்சநேயர். ''அவரா இப்படி ஆணையிட்டார்'' என்று கேட்டுக்கொண்டே சீதையிடம் போய 'அப்படியா?' என்று கேட்டார். ''ஆமாம்! இது ஒரு அதிசயமான அம்மி! திரிசடை தான் சொன்னாள்! அதுதான் அதை எடுக்கும்படியாக அனுமனிடம சொன்னேன். அதில் என்ன தப்பு?'' என்றார் சீதை.

''தங்களுடைய கணவர் இலங்கையை விபீஷணனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார். தானமாக ஒரு பொருளை ஒருவரிடம் கொடுத்தாகிவிட்டதென்றால் - மறுபடியும் அதிலிருந்து எதையும் திரும்ப வாங்கக்கூடாது. தானம் வாங்கினவனே தருகிறேன் என்று சொன்னாலும் அதை வாங்கிக் கொள்ளக் கூடாது. அப்படி வாங்கிக் கொண்டால் தானம் செய்வதனால் கிடைக்கிற புண்ணியமும் பேய்விடும். இராமபிரான் பெற்ற அப்பேர்ப்பட்ட ஒரு பெரிய புண்ணியம் இந்த அற்பமான கல்லினால் கெட்டுப் போகவேண்டாமே என்று நினைத்துத் தான் பயப்படுகிறேன'' என்றார் ஜாம்பவான்.

''சரியான நேரத்தில் உண்மையைச் சொல்லிப் பாவச் செயலிலேயிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். எங்கள் புண்ணியம் உங்களால் காப்பாற்றப்பட்டது'' என்றார் சீதை. 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பதை உங்கள் மூலமாகத்தெரிந்து கொண்டேன் என்று சொல்லி அனுமன் சிரித்தாராம்.

''நீ சொல்லின் செல்வன் என்பதை நிரூபித்து விட்டாய்'' என்றாராம் ஜாம்பவான். இப்படி ஒரு பழங்கதை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ''தானம் கொடுத்த எதையும் திருப்பிவாங்க வேண்டும் என்று ஆசைப்டாதே'' என்பதுதான். தானமாகக் கொடுப்பதைத் திருப்பி வாங்குவதும் தப்பு. அதேமாதிரி நமக்குத் தானமாக வந்தஒன்றைத் தரம் பார்த்துக் கொண்டிருப்பதும் தப்பு!

ஒரு பசுமாட்டை நமக்கு ஒருவர் தானமாகக் கொடுக்கிறார். கொடுத்தவரிடமே இது காலையில் எவ்வளவு கறக்கும்? மாலையில் எவ்வளவு கறக்கும் என்று கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. ''தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே'' என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? என்ன அர்த்தம்? தானமாக வந்தமாட்டைப் பல்லைப்பார்த்து அதற்கு என்ன வயது... நல்லமாடு தானா என்று சோதிக்காதே என்று அர்த்தம். அப்படிச் சோதித்தால் அது கொடுத்தவனுக்கு மரியாதையில்லை!

நமது ஆள் ஒருவர் ஒரு பசுமாட்டை ஒருவரிடம் தானமாகக் கொடுத்து அனுப்பிவிட்டார். பின்னர் அவர் ''நான் தானமாகக் கொடுத்த அந்த மாட்டை அவன் பல்லைப்பிடித்துப் பார்த்தாலும் நான் ஒன்றும் கவலைப்பட மாட்டேன்' என்றார் ''ஏன்?'' என்று கேட்டேன். ''பற்கள் எல்லாம் போனதற்கும் பின்புதானே அதை நான் தானம் பண்ணியிருக் கிறேன். அது இனிமேல் எதற்கும் உபயோகப்படாதுசார்!'' என்று வெகுசாவகாசமாகச் சொன்னார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஐந்து வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் புதிய பஸ் வண்டிகள் வழங்கப்படும்

### அமைச்சர் தி.மகேஸ்வரன் தகவல்

(கோப்பாய்)

யாழ்.மாணவர்களின் சுற்றுலாத் துறையை விருத்தியடையச் செய்யும் விதத்தில் ஐந்து வலயக்கல்விப் பணிப்பாளர்களிற்கும் தலா 1பஸ் வண்டி என்றவகையில் 5பஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் நாவலர் வித்தியாலய வருடாந்த இல்ல நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் திமகேஸ்வரன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் கே. வி. குணசேகரம் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் பலத்த போராட்டங்களின் மத்தியில் நாவலர் பெருமான் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். இதன் எச்ச சொச்சங்களில் ஒன்றாக கோப்பாய் நாவலர் வித்தியாலயம் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. வெகு விரைவில் யாழ்.குடா நாட்டில் பிரமாண்ட அளவிலான நாவலர் பெருமானின் சிலை ஒன்றை நிறுவ இந்து கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அச்சியந்திர சாலை ஒன்றை நிறுவதன் மூலம் துறைசார்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் சமய நூல்கள், தமிழ்நூல்கள் ஆகியவற்றை வெளியிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் அழியாத செல்வம் கல்விச் செல்வம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. எனவே இன்றைய காலவோட்டத்திற்கு ஏற்றவகையில் கணனிக் கல்வியை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும். எனவே இதனை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகளிற்கு கணனிகள் வழங்கியுள்ளதுடன் படிப்படியாக சகல பாடசாலைகளிற்கும் வழங்கப்படவுள்ளது. பழைய மாணவ சங்கங்கள் பாடசாலைகளுக்கு கணனிகளை கொள்வனவு செய்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. இவர்கள் இச் செயற்பாட்டில் முழுமையான பங்காளிகளாக வேண்டும் எனத் தெரிவித்தார். மேற்படி பாடசாலைக்கு கணனி ஒன்றை வழங்கியதுடன் மேலும் 10கணனிகளையும், ஒலிபெருக்கி சாதனங்கள், தளபாடங்கள் ஆகியவற்றை விரைவில் வழங்கவுள்ளதாக தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழக விலங்கியல்துறை விரிவுரையாளர் சுகுகதாஸன் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-79)

# வடக்கு - கிழக்கு பாடசாலைகள் புனரமைப்புக்கு 92மில்லியன் நிதி

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உள்ள கட்டடங்களைப் புனரமைப்பதற்கென இவ்வாண்டு 92மில்லியன் ரூபாவைக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 24கல்வி வலயங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக பாடசாலை வேலைகள் பணிப்பாளரும், பொறியியலாளருமான எஸ்.கே வினாகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில், இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து கையளிக்கப்பட்ட 12பாடசாலைகளை புனரமைப்பதற்கு 23மில்லியன் ரூபாவும்,

புதிய வகுப்பறைகள், கிணறுகள், மலசலகூடவசதிகள், கணனி அறைகள் என்பவற்றை அமைப்பதற்கு 32மில்லியன் ரூபாவும்,

இவை தவிர கடந்தாண்டு ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்படாத அரசாங்கப்பாடசாலை கட்டிடங்களின் புனர்நிர்மாணப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 37மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (க-8)

## இராசி பலன்

**10.03.2003**

**(மாசி 26, திங்கள்)**

| | |
|---|---|
| சப்தமி | மு.இ 8.57வரை |
| ரோகிணி | மு.இ 3.51வரை |
| இராகுகாலம் | 7.54 - 9.24 |
| நல்லநேரம் | 12.24 - 1.54 |

**அமிர்தம்**

**மேடம்**
மனக்கிலேசம், எதிர்பாராத நன்மை, அதிகாரம், தனவிரயம்.

**இடபம்**
புதிய பொருள் சேர்க்கை, ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி.

**மிதுனம்**
சுபசெலவு, கோபப்படுதல், பிதாசிந்தை, முயற்சி தாமதம்.

**கடகம்**
தொழில் சிந்தை, பெருமையடைதல், நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
சுபநிகழ்ச்சி, உற்சாகம், கடினஉழைப்பு, தூரதேசச்செய்தி.

**கன்னி**
ஆன்றோர் மதிப்பு, புதியதிட்டமிடல், அச்சமான நிலை, உடல் உழைப்பு.

**துலாம்**
போசன சுகம், அமைதிக்குறைவு, எதிர்பாராத பிரச்சினை, உடல்நலக்குறைவு.

**விருச்சிகம்**
திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, கௌரவமான நிலை, முயற்சி பலிதம்.

**தனுசு**
சுகவாழ்வு, சத்துருஜெயம், காரிய நன்மை, செய்தொழில் விருத்தி.

**மகரம்**
வியாபார விருத்தி, மனச்சஞ்சலம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு.

**கும்பம்**
கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு, புதியபொருள் சேர்க்கை, தனவிருத்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# முஸ்லிம்விவசாயிகளின்காணிகளை ஒப்படைக்கும்பணிதுரிதம்

(கொழும்பு)

செங்கலடிப்பகுதி முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது கிழக்கு மாகாணத்தில் பயிர் செய்யப்படாத முஸ்லிம்களின் விவசாயக் காணிகள் குறித்து ஆராயப்பட்டது.

செங்கலடி - பதுளை வீதியை அண்மித்த சுமார் 15ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் கடந்த 13வருடங்களாக பயிர்ச் செய்கை பண்ணப்படாமல் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ்ப்பகுதிகளில் உள்ள முஸ்லிம்களின் வயல்நிலங்கள்தொடர்பான விபரங்களை கோரி இருந்தனர்.

இதற்கிணங்க தற்போது விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக, ஏறாவூர் பள்ளிவாசல் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளத்தின் தலைவர் ரி.எல்.மொஹைதீன்பாபா தெரிவித்துள்ளார். (க-8)

# வழக்குகளை தீர்க்கும் புதிய திட்டம் விரைவில் அமுல்

### நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நீதித் துறையை விஸ்தரித்து வழக்குகளை விரைவில் தீர்த்து வைக்கும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை நீதிச்சேவை ஆணைக்குழு ஆரம்பிக்கவுள்ளது.

இதன் பிரகாரம் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள மஜிஸ்திரேட் நீதிமன்றை விஸ்தரிக்கும் நோக்கில் மஜிஸ்திரேட் நீதிபதிகளைக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் இதன்படி மஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் கடமை புரியும் 157மஜிஸ்திரேட் நீதிவான்களுடன் மேலும் 17 மஜிஸ்திரேட் நீதிவான்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவ்வாறு புதிதாக சேர்த்துக் கொள்ளபடவுள்ள நீதிவான்களுக்கு நீதித்துறை தொடர்பான ஆரம்பப் பயிற்சி நெறிகள்தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (க-10)

# பெண் என்ற முகவர் ஊடாகவே சமூக நீதி நிலைநாட்டப்படவேண்டும்

### *ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் தெரிவிப்பு*

(யாழ்ப்பாணம்)

பெண்கள் சமூகமாற்றத்திற்கான முகவர் என்ற அங்கீகாரம் எல்லோர் மனதிலும் ஏற்பட வேண்டும். பெண் என்ற செயற்றிறன் மிக்க முகவரூடாகவே சமூகநீதி நிலை நாட்டப்பட வேண்டும்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய ஓய்வுபெற்ற அதிபரும் சமூகசேவகியுமான செல்வி த.நல்லதம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உப-அதிபர் திருமதி சி.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெண்களின் விடுதலை என்பது பெண்களின் பிரச்சினை மட்டுமல்ல சமூக மேம்பாட்டுடன் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு விடயமே பெண் விடுதலை ஆகும்.

சமூகத்தில் பெண்ணிற்குக் கல்வி வழங்குவது சமூகத்திற்கு ஒளியேற்றுவதற்கு ஒப்பானதாகும். அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்களின் வறுமை ஒழிப்புச் செயற்திட்டங்களில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமாக சுகாதாரம், நலத்துறை, கல்வி போன்றவற்றில் மேம்பட்ட சிறந்த பெண்கள் வளத்தை விருத்தி செய்யலாம்.

பெண்கள் ஆண்களுக்குச் சமனான மனிதவளம் என்பதை ஆண்கள் அறிவு ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்குப் பாடசாலை மட்டங்களில் ஏற்பாடு செயயப்படுகின்ற மகளிர்தின விழாக்கள் பேருதவி புரியும் என்றார் (க)

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி
வழி பயக்கும்
ஊதியம் சூழ்ந்து செயல்
— குறள்

## வலம்புரி

### எச்சரிக்கை நடவடிக்கை

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ் வேளையில் சர்வதேச அமைப்புக்கள் இலங்கையை நோக்கிப் படை எடுத்த வண்ணம் உள்ளன.

ஐ.நா.சபை,உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்ற வரிசையில் இன்னும் பல நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு வருவதில் ஆர்வத்தோடு பங்கேற்கின்றன.

இருபது வருடகால யுத்தம்; அதனால் தமிழ் மக்கள் அனுபவித்த அவலம் எல்லாம் நடந்தபோது-1983களில் தமிழர்கள் தீ மூட்டி எரிக்கப்பட்ட போது இவ்வமைப்புக்கள் மௌனமாக-அப்படியான அமைப்புக்களே சர்வதேசத்தில் இல்லை என்பது போல் நடந்து கொண்டன.ஆனால் இப்போது இவ்வமைப்புக்கள் போட்டி போட்டுக் கொண்டு இலங்கைக்கு, குறிப்பாக வடக்குக் கிழக்கிற்கு வருவதன் நோக்கம் ஆராயப்பட வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை இப்போது சர்வதேசப் பிரச்சினையாக தோற்றம் பெற்றுள்ளது.இதற்கு அடிப்படை அமெரிக்காவே.அதாவது விடுதலைப் புலிகளின் போர்த்திறனில் திகைப்படைந்த அமெரிக்கா விடுதலைப் புலிகளின் படைப் பலம் மேலும் அதிகரிப்பதை விரும்பவில்லை அவ்வாறு புலிகளின் பலம் அதிகரிக்குமாயின் அ∴து அமெரிக்காவுக்கே அச்சுறுத்தலாக அமையும் என்ற ஓர் கபட நோக்கத்திலேயே அமெரிக்கா தனது பார்வையை இலங்கை மீது திசை திருப்பியுள்ளது.

உலகில் சமாதானத்தை விரும்பும் நாடுபோல் தன்னைக் காட்டிக் கொண்ட அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டுள்ளது.யார் தலையிட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்களின் சுய கௌரவம்,அடிப்படை உரிமை,மரபுவழித் தாயகம் என்பன உறுதிப்படுத்தப்பட்ட உரிமை நிரந்தரமாக-மீண்டும் ஓர் ஏமாற்றுகைக்கு உட்படாமல் கிடைக்குமாயின் அதனை யாருமே புறந்தள்ளப் போவதில்லை.

மாறாக சமாதான முயற்சிகளை விடுதலைப் புலிகள் இடை நடுவில் கைவிட்டு விடுவார்கள் என்பது போல் அமெரிக்கா நடந்து கொள்ளுமாயின் அதன் முடிவுகள் ஆபத்தானவையாகவே அமையும்.

குறிப்பாக அரசுக்கும்,விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறுகின்ற சமாதானப் பேச்சுக்களில் புலிகள் சறுக்கி விடுவார்கள் என்றும் அதனை மேற்பார்வை செய்வது போல் சர்வதேச அமைப்புக்கள் படையெடுப்பதும் அவ்வளவு நல்லதாக இல்லை.

திறந்த மனத்தோடு-தூய்மையாக மக்கள் பணி செய்ய வருகின்ற அமைப்புக்களுக்கு இருகரம் கூப்பிய வரவேற்புண்டு ஆனால்,கபட நோக்கத்தோடு அரசுக்கு ஆதரவாக அமெரிக்காவின் ஆலோசனையில் வருகின்ற அமைப்புக்களுக்கு ஆபத்து இருக்கவே செய்யும் என்பதால் அமைப்புக்கள் பொறுப்போடு நடப்பது அவசியமாகும்.

# மரண தண்டனை மீண்டும் அமுலாவதின் சாதக பாதகம்

கட்டுரைத் தொகுப்பு:
ரமேஸ்

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் அமெரிக்கா, தென் அமெரிக்கா,ரஷ்யா,சீனா ஆகிய நாடுகளில் கொலையாளிகளுக்கு மரணதண்டனை அமுலில் இருந்து வருகின்றது.

அந்தக் காலத்தில் எமது நாட்டில் கொலையாளிகளை இரண்டு மரங்களில் கட்டிவிட்டு மரணதண்டனை நிறைவேற்றும் முறை அமுலில் இருந்துள்ளது. அதாவது அருகருகே நிற்கும் இரண்டு முகமரங்களை இழுத்துக் கட்டிவிட்டு அந்த மரங்களில் கொலையாளியின் கால்களை பிணைத்துக் காட்டி ஒன்றாக இணைக்கப்பட்ட மரங்களின் பிணைப்பை அறுத்து விடுவார்கள். ஏன் குற்றம் புரிகிறவர்களை கழுவேற்றுவதும் கூடஅமுலில் இருந்துள்ளது. இது காட்டு மிராண்டித் தனமான மரண தண்டனைகள்.

கொலையாளிகளை சிங்கத்தின் கூண்டுக்குள் தள்ளி விடும் முறை கூட இருந்துள்ளது. ஆனால் இந்த விதமான தண்டனைகளால் நாடுகளில் கொலைக்குற்றங்கள் குறைந்திருத்ததாகவும் கருதப்படுகின்றது. சமூகத்தால் மோசமான குற்றங்கள் என்று கருதப்படுபவைக்கு பெரும்பாலான நாடுகளில் மரண தண்டனையே வழங்கப்படுவது வழக்கத்திலிருந்துள்ளது.

பல சமயங்களில் மரணதண்டனைக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. அமெரிக்காவில் கத்தோலிக்க மதத்தினர் மரணதண்டனையை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எதிர்த்து வருகிறார்கள்.

மரணதண்டனை இருக்க வேண்டும் என்று கூறுபவர்கள் மிக பொறுப்பான மனிதர்கள். பாரிய குற்றங்கள் புரியும் போது அவர்களுக்கு மரண தண்டனை விதித்தால் ஏனையவர்களுக்கு எச்சரிக்கையாக அமைந்து குற்றங்கள் குறைய வாய்ப்புண்டு எனக் கூறுகிறார்கள். எதிர்ப்பவர்கள் தான் முதலில் மரணதண்டனை தார்மீக ரீதியில் தவறானதாகும் என்கிறார்கள். அனுபவம் எதுவித தாக்கமான நன்மைகளையும் செய்து விடவும் இல்லை என்கிறார்கள்.

மற்றவர்களின் உயிர்களையும் உடல் உறுப்புக்களையும் மதித்து வாழ்கின்ற ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கும் மக்கள் அதிகமாக வாழ்கின்ற சமூகங்களில் மரண தண்டனை தேவையில்லாமலிருக்கலாம். ஏனையவர்களைப் பொறுத்தவரை மரணதண்டனை தாக்கமான நல்விளைவுகளைஏற்படுத்துகிறதாஇல்லையா என்பதே முக்கியம்.

குற்றம் செய்யும் ஒருவர் நீதித்துறையின் பல்வேறு நடைமுறைச் செயற்பாடுகளின் போது பிடிபட்டு விடுவார் என்ற நிலை இருக்க வேண்டும். ஒருவர் இன்னொருவரைத் தனக்காக அல்லது இன்னொருவருக்காகக் கொலை செய்யக்கூடும். அவ்வாறு செய்யும் போது சட்டத்தின் பிடியில் இருந்து தாம் தப்பித்துக் கொள்ளும் அல்லது சட்டத்தின் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் பற்றி ஆராயக்கூடும். அவ்வாறு ஆராயும் போதுதாம் தப்பித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் துர்லபமாகவே உள்ளது எனக்காணும் போது அக்குற்றத்தை அவர்தவிர்க்கக் கூடும்.

ஒப்பந்தக் கொலைகள் நம் நாட்டில் இன்று அதிகரித்து விட்டன. எனவே அவ்வாறு கொலை செய்பவர் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகமாகவுள்ளதென்ற நிலையில் தாம் செய்யும் கொலைக்கு தமது உயிரையே மாற்றீடாக வைப்பதற்கு அவர் தயங்கக்கூடும்.

எமது நீதி மன்றங்களில் குற்ற வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிவெடுப்பதில் நீண்ட காலம் செல்கின்றது.

முதலில் குற்றத்தின் முதல் நிலை விசாரணைகள் நடைபெற்று வழக்கு விசாரணை இரண்டாம் கட்டத்தை அடைகின்றது. குற்றம் சாட்டிப்பட்டவர் தமது நிதி நிலை வசதிகளைப் பொறுத்தும் செல்வாக்குள்ள அரசியல் வாதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் தொடர்புகளைப் பொறுத்தும் விடுவிக்கப்படும் சாத்தியம் இருக்கின்றது. குற்றவாளிகளை விடுவிப்பதில் இந்த இரு தரப்பினரும் தலையிட்டு வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டு வரப்பட்டுள்ளன. குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் மேன் முறையீடுகள் செய்யப்பட்டு குற்றவாளிக்காக ஏற்படும் வழக்கறிஞர்கள் எல்லாவித சட்ட நுட்பங்களையும் பிரயோகித்து அவரை விடுவிக்க முயல்கிறார்கள்.

பெரும்பாலான கொலையாளிகள் நம்நாட்டில் உணர்ச்சி வசப்பட்டே கொலைகளைச் செய்து விடுகிறார்கள். மரணதண்டணை மூலம் இப்படியானவர்களை நேரடியாக வன்றி மறைமுகமாகவே தடுக்க முடியும். சமூகம் சரியானதைச்செய்யும் மனிதர்களையே மதிக்கிறது என்பது போன்ற ஒரு தார்மீக உணர்வை மக்கள் மத்தியில் இறுக்கமாகப் பதிக்கப்பட்டிருப்பது அவசியம். ஆனால் நமது மக்கள் தினமும் ஏதாவது போதனைகளைக் கேட்டுக் கொண்டு தான் வருகிறார்கள். பாடசாலைகள்,கோயில்கள், தேவாலயங்களில், போதனைகள் இடம்பெறத்தான் செய்கின்றன.ஆனால் மனச்சாட்சி என்ற கோட்பாடு மனிதர்களிடம் கொஞ்சமும் காணப்படவில்லை.

மூளைக் கோளாறு, குடிவெறி போன்ற காரணங்களாலும் சிலர் கொலை செய்கிறார்கள். குற்றவியல் வழக்குகளில் மனநோய் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய சாதகமான கருத்தாகும். கொலை செய்யக் கூடியவர்களை அந்த எண்ணம் கொண்டவர்களை மரண தண்டனை மூலம் திருத்த முடியும் என்பது சந்தேகத்திற்குரியதே. இந்த விடயத்தில் மிகவும் பலனளிக்கக்கூடியதான வேறு முறைகளை நாம் ஆராய வேண்டும்.

குற்றவாளிகளை சீர்திருத்தலாம் என்ற கருத்தும் கடந்த பல காலமாக எதிர் பார்த்த பலனைத் தரவில்லை. சீர்திருத்தங்களுக்கு உட்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட முன்னாள் கைதிகள் அதே குற்றங்களைச் செய்து விட்டு மீண்டும் சிறைக்கு வருகிறார்கள் என்று முன்னாள் சிறை ஆணையாளர் ஒருவர் கூறியிருக்கின்றார். எனவே குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிப்பதை விட ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்குவது சமூகப் பாதுகாப்பிற்கு உதவியாக இருக்கும்.

ஆனால் குற்றம் புரியாதவர்கள் தூக்கு மேடைக்குப் போகாமல் இருப்பது முக்கியம்.

கொலையாளி தப்பிவிடுவானானால் மீண்டும் அதைஅவன் செய்ய மாட்டான் என்று சொல்ல முடியாது. அமெரிக்காவில் ஒரு குற்றச்சாட்டு என்னவென்றால் கறுப்பர்கள் கொலை செய்தால் மரணதண்டனை அதையே வெள்ளையர் செய்தால் தப்பிவிட முடியும் என்பதாகும். அதாவது ஒரு கறுப்பர் வெள்ளையரைக் கொன்றால் அவருக்கு மரண தண்டனை.வெள்ளையர் ஒரு கறுப்பரைக் கொன்றால் அவருக்கு சிறைத் தண்டனை மட்டும் தான் என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது. எனவே மரணதண்டனை வழங்குவதில் சம நிலைப்பாடு இருக்க வேண்டும். இப்படியான சமத்துவத்தை எமது குற்றவியல் சட்டம் வழங்குமென்று கூற முடியுமா? அரசின் நிறைவேற்று அதிகாரப் பிரிவிடம் மன்னிக்கும் அதிகாரம் இருக்கும் வரை இது சாத்தியம் இல்லை.

நீதி மன்றத்தினாலன்றி தீர்ப்புகள் மாற்றப்படலாகாது. மேன்முறையீட்டு வசதியிருக்கின்றது. மரண தண்டனை மீளவும் புகுத்தப்படுவதானால் மிக மோசமான கொலைகளுக்கும்,மிக மோசமான குற்றவாளிகளுக்குமே அது செயல்படுத்தப்பட வேண்டும்.

வழக்குரைஞரின் வாதத்தினாலும் அல்லது நீதிவான்கள் காத்திரமாக செயல்படாததினாலும் குற்றம் புரிவோர் தப்பி விடக்கூடிய நிலை இருக்கலாகாது. நீதி தவறும் போது அப்பாவிகள் தண்டனைக்குள்ளாவது ஒரு சாபக்கேடு எனவே மரண தண்டனை மீண்டும் அமுலாக்குவதானால் மிகக் கொடூரமான கொலைகளுக்கும் ஒப்பந்தக் கொலைகளுக்கும் மட்டுமே செயல்படுத்துவது நன்று. (பி)

## அமைச்சர் அமரதுங்க இலஞ்ச ஆணைக்குழுத்தலைவர்

(கோட்டை)

இலஞ்ச விசாரணை ஆணைக்குழு உறுப்பினர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரிய ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்பது பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டு பாராளுமன்றக் குழுவின் தலைவராக உள்ளக விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு திலக் மாரப்பன மேற்படி ஆணைக்குழுவிலிருந்து விலகிக் கொண்டதால் அந்த இடத்துக்கு திரு அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஆணைக்குழுவின் இரகசியக் காப்பில் பிரமாணத்தை திரு விக்கிரமசூரிய மீறி நடந்து கொண்டுள்ளார் எனக் கூறி கடந்த மாதம் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க தலைமையில் 76 எம்.பிக்கள் பாராளுமன்றில் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து மேற்படி தெரிவுக் குழு கடந்த மாதம் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவால் நியமிக்கப்பட்டிருந்தது.

கடந்த புதன்கிழமை குழு முதன் முதலாகக் கூடிய போது அமைச்சர் மாரப்பன தாம் குழுவிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள், எம்.எச் முகம்மத், தினேஷ் குணவர்த்தன, நிமால் ஸ்ரீ பால டி சில்வா,ஹேமாக்குமார நாணயக்கார,சுனில்ஹன்டு நெட்டி, நவிந்திர றந்தெனிய ஆகியவர்களாவர்.

ஆணைக்குழுவுக்கு அனுசரணை வழங்கி வரும் இன்ஸ்பெக்டர் சரத் நந்தசேனவை 2001ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அழைத்துச் சென்று, அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க சம்பந்தமாக நடைபெற்று வரும் விசாரணை விபரங்களைக் கூறும்படி பணித்தார் என ஆணையாளர் விக்கிரமசூரிய மீது பிரேரணையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதன்படி இலஞ்ச ஆணைக் குழுவின் சட்டத்தின் இரகசியப் பாதுகாப்புப் பிரிவை அவர் மீறியிருப்பதாகவும் அவரை அப்பதவியிலிருந்து நீக்குமாறும் பிரேரணையில் வற்புறுத்தப்பட்டிருந்தது. (பி)

### ௐ தினசரி தியானம்

### சேவையின் பயன்

உன் குழந்தைக்கு நீ ஏதாவது உதவிசெய்தால் அதற்காக அவனிடமிருந்து ஏதாவது எதிர் பார்க்கிறாயா? அது போலவே பிறர்விஷயத்திலும் அவர்களிடமிருந்து எதனையும் எதிர்பாராமல் அவர்களுக்காகவே உழை. அதுவே சேவை.

இது முதலில் உனக்குச் சிறிது கஷ்டமாகவே தோன்றும். ஏனெனில் இது மாதிரியான சுயநலமற்ற சேவை நீ செய்தது கிடையாது. அதன் மூலம் கிடைக்கும் பேரானந்தத்தை ஒரு முறை நீ அனுபவித்து விட்டால் பிறகு அதை விடமாட்டாய். சேவையின் சக்தி உன்னை மேலும் மேலும் வளர்த்து, ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் அதில் ஈடுபடச் செய்யும். இவ்வாறு செய்தால் இவ்வுலகம் முழுவதும் இறைவனின் உருவம் என்பதை உணர்வாய்

சுவாமி சிவானந்தர்

### தவக்கால சிந்தனை

**''உமது வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன''**

இவ்வுலகில் நடக்கும் அநீதிகளுக்கெல்லாம் காரணம் சுயநலம். இந்த சுயநலத்தால் விளைவது தான் அநீதி. அடக்குமுறை,போட்டி ,பொறாமை,கொலை போன்று அன்றாடம் நடக்கும் தீய நிகழ்வுகள் சுயநலம் என்பது நச்சு போன்றது. முதல் வாசகத்தில் நலமான கூட்டு வாழ்வுக்கு, அன்பான உறவு வாழ்வுக்கு தேவையானது. பிறரன்பு என்பது தெளிவாகிறது. பிறரன்பு என்பது ஒடுக்கப்பட்டவர்கள் மேலும், ஏழைகள் மேலும் நாம் காட்டும் அன்பு. இறைவன் எப்போதும் ஒடுக்கப்பட்டவர் சார்பாகவும் ஏழைகள் சார்பாகவும் இருக்கிறார். இதையே இயேசுகிறிஸ்து தனது பொதுத் தீர்வை போதனையில் ஏழை ஒருவனுக்கு செய்த உதவிகளெல்லாம் தனக்கே செய்ததாக தெளிவாகக் கூறுகிறார். சுயநலத்தை விட்டு வெளியேறி பிறர் நலனில் அக்கறை காட்டும் போது உறவில் திருப்தியும் உள்ளத்தில் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக் கோரி

# நாளைய வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு சகலரும் பூரண ஆதரவை வழங்க வேண்டும்

### —மாவை எம்.பி. வேண்டுகோள்—

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களிற்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நாளை செவ்வாய்கிழமை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்

நாளை செவ்வாய்கிழமை மேற்கொள்ளப்படவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்தொடர்பாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அவசர செயற்குழுவினை திருகோணமலையில் கூட்டி நாளை செவ்வாய்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவும் அமைதிப் பேரணி நடத்தவும் அழைப்பு விடுத்துள்ளது.மாறி மாறி வந்த அரசுகள் தமிழ் தேசிய இனத்தையே அழித்திடும் திட்டத்துடன் தமிழர் கல்வியை முதலில் சிதைத்து விட கடந்த 30 ஆண்டுகளுக்குமேலான முனைத்து வந்து இருக்கிறது.

போரினால் தமிழ் தேசக் கல்விக் கூடங்கள் அழிக்கப்பட்டபோதும் கல்விச் செல்வத்தை காப்பாற்றிவரும் தமிழ் ஆசிரியர் சமூகத்தின் அளப்பரிய அர்ப்பணத்தை அனைவரும் அறிவோம்

அதுவும் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தென்னிலங்கையில் மேலதிகமாக நியமனம் பெற்று ஆதாயம் பெறுகிற போது 10ஆயிரத்திற்கும அதிகமான வெற்றிடங்கள் தமிழ் பள்ளிக்கூடங்களிலே நிரப்பப்படவில்லை.

கல்வி மேம்பாட்டுக்கான வளங்கள் தமிழ் தேசத்தில் குறிப்பாக கிராமப் புறங்களில் வழங்கப்படவில்லை பதவி உயர்வுகள் நிவாரணங்கள் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஓராண்டு கடந்தும் சமாதான சூழல் என்ற போதும் தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்னும் இராணுவ பிரகடனத்தால் யாழ. குடாநாட்டிலேயே 30 வீத நிலப்பரப்பில் இராணுவ குடியேற்றமும், பொது நிலங்களிலும் தனியார் வயல் நிலங்களிலும் இராணுவ மீள் குடியேற்றம் நடத்தப்படுகின்றது.

சொந்த மண்ணில் இருந்து தூரத்தப்பட்ட தமிழ் மக்களுக்கு மீள குடியேற்றம் கடந்த 15 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது.தமிழ தேசத்தில் கல்விக் கூடங்களில், கல்வி சமூகத்தில்,மாணவர்களிடத்தில் இயல்பு வாழ்வோ அமைதி சூழலோ இன்னும் ஏற்படவில்லை.

இவை பற்றியெல்லாம் அரசுடன், கல்வியமைச்சுடன் எத்தனை தடவையுடன் பேசியாகிவிட்டன ஆசிரியர் தொழில் சங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் எட்டிய உடன்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை அவை பற்றிபேசுவதற்கே இழுத தடிப்பு.

இந்நிலையில்தான் தமிழ்த் தேசத்து கல்விசமூகத்தின் வருங் கால நலன் கருதி அடையாள வேலை நிறுத்த போராட்டத்துக்கும் அமைதி பேரணிக்கும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுததுள்ளது.

தமிழ் தேசத்தின் விடிவிலும் தமிழ் பேசும் மக்களின் கல்வி மேம்பாட்டிலும் பற்றுக் கொண்ட அனைவரும் தமிழர் ஆசிரியர் சமூகத்தின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என அழைப்பு விடுகிறோம் இவ்வாறு அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(சுதுமலை)

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் த.தர்மசோதி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சுந்தரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (த-252)

(மண்கும்பான்)

யாழ்.சென்மேரிஸ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் எம். செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (த-55)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மௌனப் பேரணியில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

அரசு முன்னர் ஏற்றுக்கொண்டபடி வடக்கு கிழக்கில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் ஆயிரம் பேருக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் நாளை பாடசாலைகளை பகிஷ்கரித்து அன்று காலை 10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும் மௌனப் பேரணியில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

(க)

## பொது இடங்களில் இருந்து படையினரை வாபஸ் பெறுக

## ரெலோவின் மத்திய குழு தீர்மானம்

(மட்டக்களப்பு)

பொது மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பொது இடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் உடனடியாக வாபஸ் பெறப்பட்டு இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.புரிந்துணர்வு உடன்படிக்கையில் நடை முறைப் படுத்தாத விடயங்களை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ரெலோ அமைப்பின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ரெலோ அமைப்பின மட்டகளப்பு மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்புத் தொடர் பாக அடைக்கலநாதன் விளக்கிக் கூறினார்.

நேற்றைய கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

* தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை அரசு ஏற்று அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முடிவு கட்டுதல்.
* புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தி பொது இடங்களில் இருந்து படையினரை விரைவில் வெளியேற்றுதல்.
* தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தீர்வு காண அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல்.
* வடக்குக் கிழக்குக் கடற்பரப்பில் மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்வதற்கான உத்தரவாதத்தை அரசு வழங்க வேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (த)

## புளொட் சித்தார்த்தன் — எழிலன் வவுனியாவில் சந்திப்பு

(வவுனியா)

புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனும், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும் பொது நிகழ்வொன்றில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

வவுனியா தெற்கு இலுப்பைக் குளத்தில் இடம்பெற்ற சனசமூக நிலையத் திறப்பு விழாவிலேயே இருவரும் கைலாகு கொடுத்து அறிமுகமாகி கலந்துரையாடியுள்ளனர்.

வவுனியாவில் இடம்பெற்ற இப் பொது நிகழ்வில் இருவரும் முதல் முறையாக சந்தித்ததுடன் ஒரே மேடையில் அருகருகே இருந்து கலந்துரையாடியமை குறிப்பிடத் தக்கது. (வ)

### கச்சதீவு...

பட்டு ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின் பொலிஸார் சடலத்தை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மரண விசாரணையின் பின் சடலம் நேற்றே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

படகிலிருந்து தவறி வீழ்ந்த பிரஸ்தாப நபர் கடற்பாறைகளுக்குள் சிக்குண்டதாலேயே உயிரிழக்கநேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4,7,48,126,117)

### தமிழர்களின்..

ஊர்வலத்தின் போது அதனைக் குழப்புவதற்கு சில தீய சக்திகள் திட்டமிட்டுள்ளதால் ஊர்வலத்திற்கு அதிஉச்ச பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். எதற்கும் முன்னேற்பாடான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பிரதமரை ஏற்கனவே கேட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

### தலை நகரில்..

மூட்டவும்.எதிர்க்கட்சியினர் கைது செய்யப்படக் கூடிய சூழலை உருவாக்கி அதனை ஒரு பிரச்சினையாக மாற்றவும் திட்மிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனை எம்மால் அனுமதிக்க முடியாது.ஜே.வி.பியின் பின்னணி பற்றி எமக்கு ஏற்கனவே தெரியும் நாம் எதிர்க்கட்சியுடன் எச்சரிக்கையுடன் செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

இன்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் பல லட்சக்கணக்கான பொது மக்கள் கலந்து கொள்ளக் கூடுமென்ற எதிர்பார்ப்பில தலை நகரில் விஷேடமாக 2000க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ.சு.கட்சி,ஜே.வி.பி,மக்கள் ஐக்கிய முன்னணி,தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து நடத்தும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி பிற்பகல் ஒரு மணியளவில் பொறளை கம்பல் பூங்காவில் ஆரம்பமாகி தலை நகரைச் சென்றடையவுள்ளது. (த)

### சமாதான...

காண்பதற்கு அரசாங்கம் விரும்புவதாலேயே அரசு விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு அதன் அடிப்படையில் சமாதானப் பேசசுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.இப்பேச்சுவார்த்தையானது தற்போது மிகவும் முன்னேற்றகரமான முறையில் நகர்ந்து செல்கிறது.இந் நிலையில் இராணுவத்தினர் தமது பூரண ஒத்துழைப்பை இப் பேச்சுவார்த்தைக்கு வழங்க வேண்டும்.

அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இராணுவத்தினர் எவ்வகையிலும் சந்தேகப்படத் தேவையில்லை.இனப் பிரச்சினைக்கு ஆரோக்கியமான நல்ல தீர்வொன்றினைக் காண்பதற்கு அரசு விரும்பியதாலேயே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என்று கூறினார்.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் உரையின் போது இராணுவத் தரப்பினர் எழுப்பிய சந்தேகங்களுக்கு அவர் பதிலளிக்கையில் அரசு தற்போது மேற்கொண்டு வரும பேச்சுவார்த்தை வெற்றி பெற்று யுத்தம் முடிவுக்கு வருமானால் இராணுவ சேவையில் இருப்பவர்கள் ஒரு போதும் வேலையில் இருந்து இடை நிறுத்தப் படமாட்டார்கள்.அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சகல சலுகைகளும் விஷேட கொடுப்பனவுகளும் நிறுத்தப்படமாட்டாது.

தற்போதையை சமாதானப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையை கட்டியெழுப்ப கூடிய வகையில் நடைபெற்று வருவதனால் சமாதானத்திற்கு ஏற்பட்டுள்ள இறுதியான சந்தர்ப்பம் இதுவாகும் இதனை நாம் ஒரு போதும் கைநழுவி விடக் கூடாது.

இடம் பெயர்ந்த மக்களை அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீளக்குடியமர்த்தி சமாதான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம)


## மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம்

**இராவணேஸ்வரனாலும் தம்பி விபீஷணச் சக்கரவர்த்தியாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகோடி சிவலிங்கங்களுள் ஒன்றான**

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம் 19.03.2003 புதன் காலை 6.30-7.30 க்கு இடையில் நடை பெறும்.கும்பாபிஷேக முதல் நாள் 18.03.2003 செவ்வாய்க்கிழமை 2மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்தலாம்.அன்று சுவர்ண பந்தனத்தை பார்வையிடலாம்.

காலை 6மணியில் இருந்து போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருப்பணிக்கு நிதி உதவுக.

ஸ்ரீலஸ்ரீ.சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்

அறங்காவலர்

(C/5831)


## குமார் பொன்னம்பலத்தின் 3ம் ஆண்டு நினைவு நிகழ்வு

### நேற்று வடமராட்சியில் அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

அமரர் குமார் பொன்னம்பலத்தின் 3ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று நெல்லியடி லக்சுமி திரையரங்கில் வடமராட்சி சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உருத்திரா தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து அமரரின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி ஊர்வலமாகச் சென்று திரையரங்கையடைந்தது.

ஊர்வலம் சென்ற வேளை வீதிகளின் இருமருங்கிலும் வீடுகள், பாடசாலைகள், கோவில்கள் என்பவற்றில் கும்பம் வைத்து வரவேற்கப்பட்டது. வடமராட்சி அரசியல்துறை அலுவலகத்திற்கு முன்னால் திருவுருவப்படம் சென்ற வேளை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மலர் ம்மாலை அணிவிக்க, ஏனைய உறுப்பினர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் லக்சுமி திரையரங்கிற்கு சென்று அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு வல்வை முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தண்டாயுதபாணி தேசிகர், கரவெட்டிப் பங்குத்தந்தை வணபிதா அன்ரனிதாஸ், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வடமராட்சி அரசியல் துறை பொறுப்பாளர் வெண்ணிலவன், அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர் ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-52)

## சாராயம் விற்ற நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிபெறாது சாராய விற்பனையில் ஈடுபட்ட நால்வர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆஸ்பத்திரிவீதி, மாம்பழம் சந்தி, பழைய பூங்கா மற்றும் அரசடி வீதி ஆகிய இடங்களில் வைத்து சாராய விற்பனை செய்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சாராயப் போத்தல்கள் மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இராசாவின் தோட்டத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்த 20ற்கும் மேற்பட்ட போத்தல்கள் கசிப்பும் கைப்பற்றப்பட்டன. (ந-4)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.